1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 20-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 24-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## எனக்கே செய்தீர்கள்

[ A. சூசைமாணிக்கம் ]

### நரகம்

உலகத்திலுள்ள நமதுஐந்தாம் படைகளுக்கு ஜே! உலகஇருட்டுச்சந்தைவியாபாரிகளுக்கு ஜே!

வாழ்கபசிக்கொடுமை! தளர்க உணவு உற்பத்தி! பயங்கர ஆயுத சாதனங்கள் ஓங்குக! பாவ அக்கிரமங்களை நடத்தும் கனவான்கள் வளர்க! கடவுள் இல்லையென்றுசொல்லும் நமது நண்பர்கள் வாழ்க! இன்று பொதுக்கூட்டம் எல்லோரும் வருக! தலைவர் தீவிரமாகப் பேசுவார். இவைகள் நரகவாசவில் காணப்படும் சுலோக வாக்கியங்கள். தலைவர் னுசிப்பேர்:—

நண்பர்களே! தோழர்களே! நாம்உலகத்தில் சாதித்துள்ள காரியங்களைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். நம்யோசனையின்படியேதான் மனிதர்கள் நடக்கிறார்கள். நமது ஐந்தாம் படைகளான கம்யூனிஸ்தர்களுக்கு நல்லபயிற்சி கொடுத்திருக்கிறோம். பெண்என்றும், குழந்தைஎன்றும், சிறுவர்கள் என்றும் அவர்கள் பார்ப்பதில்லை. நாசவேலையில் நம்மையும் மிஞ்சிவிட்டார்கள். (பொதுக்கூட்டத்திலிருந்து கரகோஷம்.)

நமது கொரில்லாப்படைகளான பணக்காரர்களுக்கும், லஞ்சம்வாங்குபவர்களுக்கும் உன்னதபயிற்சி கொடுத்திருக்கிறோம். பக்கத்துவீட்டில் பட்டினிச்சாவு ஏற்பட்டாலும், பணக்காரர்கள் பதறுவதுமில்லை, ஒன்றும் கொடுப்பதுமில்லை. தானியத்தையும் பணத்தையும் நன்றாய்ப்பதுக்குகிறார்கள். நல்ல காரியந்தான். நாம் கற்றுக் கொடுத்ததற்குமேலும் தாண்டிவிட்டார்கள் லஞ்சப்பிரபுக்கள். (கூட்டத்திலிருந்து பேஷ், பேஷ், நல்லகாரியம்செய்தோம்.)

நமது பிரசாரக்கருவியான சினிமாவைப்பற்றியோ கேட்கத் தேவையில்லை. அதன் மூலம் சகலபாவங்களுக்கும் வழியாக்கி, உலகபாவங்களுக்கெல்லாம் மத்தியஸ்தமாக்கிவிட்டோம் சினிமாவை. உலகத்திலுள்ள நமது தோழர்கள் சிலர் "கடவுளே இல்லை" என்றும் சொல்லிவிட்டார்கள் நமதுபோதனையினால். (கூட்டத்திலிருந்து ஆனந்தக் கூக்குரல்.)

இனிமேல்தான் நம்மால்ஆக வேண்டியகாரியம் அநேகம் இருக்கிறது. சிலவருஷங்களுக்கு முன்பு "ஹிற்லர்" என்பவனை நமதுகையாளாகப் பாவித்து அவன்மூலம் இரண்டாவதுமகா யுத்தத்தைத் தொடக்கினோம். அவனும் அவனது ஆட்களும் சரியாகவெற்றிபெறவில்லை. இப்பொழுது ஸ்ராலின் நமக்குச் சரியான கையாள். உலகம்முழுவதும் அவனது ஆட்களும் நமது ஏஜெண்டுகளுமாகிய கம்யூனிஸ்தர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எளிதில்பேசி ஏழைமக்களை மயக்குகிறார்கள். "ஒருசிலகத்தோலிக்கர்கள்மட்டும்" கம்யூனிஸ்தவலையில் சிக்காமல்இருக்கிறார்கள். அவர்களைக் கெடுக்கவும், உலகத்தை இன்னும் மோசமாக்கவும், ஸ்ராலின்மூலம் மூன்றாவது உலகயுத்தத்தைத் தொடக்கவேண்டும். அதற்கு அவர்களுக்குஉற்சாகங்கொடுகக வேண்டும். தீயவழியில் மூளையைச்செலுத்தி, புதுப்புது ஆயுதங்களைக் கண்டுபிடிக்கச் செய்ய வேண்டும். அதன்மூலம் உலகத்தைஇன்னும் கெடுத்து நாசமாக்கவேண்டும்.

எங்கே? இன்றைய றிப்போட்டுகளை நண்பர்கள் வாசிக்கட்டும்:

**1-வது பசாசு:** நான்கம்யூனிஸ்தர்களைத்தூண்டிவிட்டு, கொறியாவில் சண்டையைத் துவக்கச் செய்துள்ளேன்.

**2-வது பசாசு:** ஐ. நா. பந்தோபஸ்துசபையில் ரூஷியாமூலம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளேன்.

**3-வது பசாசு:** காஷ்மீர் மத்தியஸ்தர் டிக்ஸனின் சமரசத்தை முறித்துள்ளேன்.

**4-வது பசாசு:** கம்யூனிஸ்த சீனவைத்தூண்டிவிட்டுள்ளேன்.

**5-வது பசாசு:** ஒருபட்டணத்திலுள்ள மனிதர்எல்லோரையும் காம மோகபாவத்தில் ஈடுபடச் செய்துள்ளேன்.

**6-வது பசாசு:** டேகுநகரிலுள்ள ஒருகத்தோலிக்க குடும்பத்தைப் பசியால்வாட்டி, அதன் கொடுமைக்குக் குடும்பத்தலைவனை [illegible] எவ்வளவு [illegible]லும் அவன்மனைவி கத்தோலிக்கவேதத்தில்விடாப்பிடியாய் இருந்துவருகிறாள்.

**எல்லாப் பசாசுகளும் சேர்ந்து:** வளர்க பட்டினிச்சாவு! பிறர்சிநேகம்ஒழிக! மூன்றாவது மகாயுத்தம் சீக்கிரம்வருக! உலகம் பாவ அக்கிரமத்தில் மூழ்குக. (கோரத்தீயின் ஊடே, ஒரே கூக்குரல் நடுவே, பயக்கரச் சுவாலையின் மத்தியில் விழுந்து மறைந்தன பசாசுகள்.)

### உலகம்

கொறியாதேசம் — டேகுநகரம்

டேகுநகரின் மூலையில் ஒரு குடிசை. பசியின்கொடுமையால் இறந்தபுருஷனின் பிரேதம். இடையிடையே பசியினால் சக்தியற்றுப்போன மகனின் அழுகுரல். சுவரிலே தேவமாதாவின்படம். படத்தைப்பார்த்த வண்ணமே கைகுவித்து முழந்தாளிலிருக்கிறாள் அந்தோனியம்மாள். அவள் கண்களில் நீர் தாரைதாரையாக வந்துகொண்டிருக்கிறது. "தாயே, கம்யூனிஸ்தர்களின் யுத்தவெறியினால் எனதுநாடு யுத்தகளமாகிவிட்டது. எல்லோரும் சண்டையிலேயே கவனம் செலுத்துகிறார்கள். வேலைக்கு எங்களைக் கூப்பிடுவாரில்லை. பணம் படைத்தோர் பணத்தையும் உணவையும் பதுக்குகிறார்கள். பசிக்கொடுமை அதிகமாகிவிட்டது. [illegible] கடாட்சியமே! பசியின்கொடுமைக்கு என்புருஷன் பலியாகிவிட்டார். அவருக்கு நித்தியஇளைப்பாற்றியை அளித்தருள வேண்டியருளும் மாதாவே! என் குடும்பத்தின் கடைசிநம்பிக்கையை உமது பேரில்வைக்கிறேன். தாயே! என்கணவனை அழைத்தது போல் என்னையும் என் மகனையும் அழைத்துக்கொள்ளும். மரணஅழைப்பிற்கு எப்போதும் தயாராயிருக்கிறோம்.

அன்னையே! பணம்படைத்தோருக்கு ஈகைக்குணத்தையும் செல்வந்தருக்கு ஏழையை ஆதரிக்கும் தன்மையையும், என்போன்ற ஏழைகளுக்கு உண்மைப்பக்தியையும் கொடுத்து வேலைசெய்யத் திறமையிருந்தும் வேலைகிடைக்காத இவ்வுலகத்தில் உடலைமறைக்கத் துணியில்லாத, கால்வயிற்றுக்கும் கஞ்சியில்லாதுபசியால்வாடும் மக்களை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பாராயோ! மரியாயே!

பல்லவி

போற்றுவோம்! போற்றுவோம்! போற்றுவோம்! மாதாவை
பொன்மலர் தூவியே பூசித்து நேசித்து (போற்)

சரணம்

(1) வானும் பூவும் வாழ்த்துகின்ற
வல்லபம் மிக்க தாயாரைத்
தேனுந் தெவிட்டுங் கீதமொடு
சேவடி தொழுவோம் வாரீர். (போற்)

(2) கோரஞ் செய்யும் அலகைகளின்
கூட்டமதனைக் கொன்றழித்த
வீரம் பொருந்திய மரியாயின்
வெற்றிசேர் விருதைத்தாங்கி ,,

(3) படைக்கல மதனால் பசாசடிமைப்
பாவஞ் சாபம் அணுகாது
அடைக்கலந் தந்தெமைக் காப்பாற்றும்
ஆறுத லான தாயே! ,,

(4) மாதிர மனைத்தும் மரியாயின்
மகிமைச்சேனை பரவிடவே
ஆதிப் பரம்பொருள் தந்தவளின்
அம்புய பாதம் பணிந்தே. ,,

(5) செபமும் தபமும் தேடாது
தேவன் நாமம் பாடாது
பவமும் பழியும் செய்தலுத்தோம்
பாராயோ? மரியாயே. ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## அமெரிக்கரின் இந்தியநட்பு

வாஷிங்ரன் — வைகாசி 14

இந்தியாவுக்கு உணவு உதவும் மசோதாமீது அமெரிக்க செனற்சபையில் இன்று விவாதம் ஆரம்பமாகியது. அவ்வமயம் செனற்சபை வெளிநாட்டு உறவுக்கம்மிற்றி அங்கத்தினர் செனற்றர் திரு. எம். ஜில்லெட் அவர்கள் பின்வருமாறு உரைத்தார்: "நாம் இந்திய மக்களின் நண்பர்கள் என்று எடுத்துச் சொல்லவும், நண்பர்களாக நடந்து கொள்ளவும் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் எவ்வளவு கெட்டியாகப் பற்றிக் கொள்ளுகின்றோம் என்பதே நம்முன்னுள்ள பிரதான பிரச்சினை." தக்க தருணத்தில் கொடுக்கும் உதவியே கொடுப்பவர்க்கு முழுத்திருப்தி அளிக்கும். 'நன்று செய்வதை இன்றே செய்க' என்று அழுத்தந் திருத்தமாக வாதித்தார் திரு. ஜில்லெட் அவர்கள்.

இந்தியாவில் உணவுநெருக்கடி எப்படி ஏற்பட்டது என்ற ஆராய்ச்சிக்கு இது நேரமல்ல. நெருக்கடி ஏற்பட்டு விட்டது. அதை எப்படிநீக்குவது என்பதே இப்போது நாம் செய்ய வேண்டிய காரியம். இதிலே சில்லறைப் பிரச்சினைகளை மோதவிடக் கூடாது. இந்தியாவுக்கு நாம் தக்க காலத்தில் செய்யும்சகாயம், நமக்கும் நமது பிள்ளைகுட்டிகளுக்கும், அதற்கு அடுத்த சந்ததிக்கும் நட்பு எனும்ரூபத்தில் இந்தியாவிடமிருந்து கிடைத்துக் கொண்டேயிருக்கும். இந்தியாவிடமிருந்து நாம் நன்றியைக்கோரவில்லை; கோரவும்கூடாது. எனினும், இதனால் நமக்கு இந்தியாவின் நட்பு வற்றாது பெருகும் என்பது நிச்சயம் என்றார் திரு. ஜில்லெட் அவர்கள்.

## அமெரிக்க தீர்மானம்

நியூயோக் — வைகாசி 14

செஞ்சீனாவுக்கும், வடகோறியாவுக்கும் மூலப்பொருட்கள் ஏற்றுமதிசெய்வதைத் தடைசெய்யும்படி ஐ. நா. அங்கத்தினர்நாடுகளையும் அங்கத்தினரல்லாத நாடுகளையும் கோரும் அமெரிக்கதீர்மானம், ஐ. நா. விசேட நடவடிக்கைக் கம்மிற்றியில் இன்று நிறைவேறியது. பன்னிருவர்கொண்ட இக் கம்மிற்றியில் 11 பிரதிநிதிகள் சாதகமாக வாக்களித்தனர். எகிப்துதேசம் வாக்கெடுப்பின்போது விலகிக்கொண்டது. பிரித்தானி, பிரான்ஸ், பெல்ஜியம், ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், வெனிஜுலா, பிறேஸில், கனடா, துருக்கி நாடுகள் தீர்மானத்தை ஆதரித்துப்பேசின. ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கூட்டுநடவடிக்கை எடுப்பதே இத்தீர்மானத்தின் நோக்கம்.

## கம்யூனிஸ்தரின் வாய்ப்பந்தல்

ஸியோல்— வைகாசி 14

கம்யூனிஸ்த ஆட்சியினர் தம்பட்டமடிக்கும் நில, தொழிலாளர் சீர்திருத்தங்களெல்லாம் ஏட்டளவு வாக்குறுதிகளேயன்றி வேறல்ல. சொல்வதுபோல அவர்கள் ஒருநாளும்செய்ய மாட்டார்கள். இவ்வாறு வடகோறியாவிலிருந்து தப்பிவந்துள்ள மாஜி கம்யூனிஸ்ததலைவர் திரு. சூ - டோ - இம் என்பவர் கூறுகிறார். வடகோறியா கம்யூனிஸத்திலிருந்து பயனடையும் ஒரேநாடு ருஷியாதான் என்று இருவாரங்களுக்குமுன் தப்பிஓடிவந்த வடகோறியா மாஜி மந்திரி ஷி டால் றியோங் கூறியது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. அணுச்சக்தி ஆயுதங்கள் செய்வதற்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் ஏராளமாக வடகோறியாவிலிருந்து ருஷியாவுக்குத் திரட்டிச் செல்லப்படுவதையும் திரு சூ - டோ - இம் வெளியிட்டார். மேலும் அவர் கூறியதாவது: கம்யூனிஸ்தர்கள் பொய்வார்த்தைகளை அள்ளிவீசுவார்கள். நில சீர்திருத்தம் பற்றி அவர்கள் கதைப்பதும் பெரும் புழுகுதான். ஏனெனில் நானே அந்தப் பொய்யைச்சொல்லி ஒருசமயம் விவசாயிகளை ஏமாற்றியிருக்கிறேன். நடப்பதனைத்தும் சொன்னதற்கு எதிராகவே இருக்கும். பகிரங்கமாகவே யந்திர சாதனங்கள் ருஷியாவுக்குக் கோறியாவிலிருந்து அகற்றப்படுகின்றன.

## மேற்றிராணியார் காலமானர்

வாஷிங்ரன் — வைகாசி 14

அமெரிக்கபிரசையும், போலிஷ் தேசிய கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவருமான மேற்றிராணியார் ஜோசப் படோஸ்கி, போலாந்தில் ஒரு சிறைமுகாமிற் காலமான செய்தியை யு. எஸ். இராசாங்கபகுதி அறிவிக்கிறது. சென்ற தைமாதத்தில் இவரைப் போலிஷ் பொலிசர் கைதுசெய்தனர். இவர் ஓர் அமெரிக்க பிரசை என்பதைப் போலாந்து ஒப்பியபோதிலும், இவரை அமெரிக்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டது. சடல சோதனைநடத்தித் தாங்களே அறிக்கை அனுப்புவதாக அவர்கள் அமெரிக்க ஸ்தானிகராலயத்தினருக்குத் தெரிவித்துள்ளனர்.

## ருஷியாவின் சுயநலநோக்கம்

வாஷிங்ரன் — வைகாசி 16

தென்கிழக் காசியாவில் தனது ஏகாதிபத்திய நோக்குகளைச் சாதித்துக்கொள்ளும் சுயநல எண்ணத்துடனேயே இந்தியாவில் "நடு நிலைமை" வாதம் வளரச்செய்வதில் ருஷியா அக்கறைகொண்டிருக்கிறது என்று முன் இந்தியாவில் செக்கோசிலவாகியாவின் ஸ்தானிகராயிருந்து, ஸ்ராலினிற்ஸ் நயவஞ்சகத்தையும், சூறையாடலையும் சகிக்காமல் பதவிதுறந்து தற்போது இங்கிலாந்திற் புகலிடந்தேடிக் கண்டடைந்த டக்றர் கிறேடோச்வில்அவர்கள் "லண்டன் அப்சர்வர்" எனும் பத்திரிகைக் காரியாலயத்துக்கு அளித்த தரிசனையின்போது குறிப்பிட்டதை, "வாஷிங்ரன் ஸ்ரார்" எனும் பத்திரிகை எடுத்து வெளியிடுகிறது.

டக்றர் கிறேடோச்வில்அவர்கள் கூறுவதாவது: இந்தியாவின் அரசியல் "நடுநிலைமை"ப்போக்கை உறுதிப்படுத்திக்கொண்டால், பின்னர் தட்டிக் கேட்கஆளில்லாமல் தனது ஏகாதிபத்தியப்பெருக்கத்தைத் துணிந்துநடத்தலாம் என்பது சோவியற் ருஷியாவின் எண்ணம். அந்த எண்ணத்துடனேயே இந்தியாவில் 'நடுநிலைமை' வாதத்தை ருஷியா ஊக்கிவருகிறது. கம்யூனிஸ்ற் அல்லாத நாடுகளை அமெரிக்காவிடமிருந்து பிளவுபடுத்தி வைப்பதையே அது இப்போது முக்கியகுறியாகக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் சோவியற்பிரசாரம் வலுத்திருக்கிறது. மேற்றிசைநாடுகளுக்கும் கீழ்த்திசை நாடுகளுக்கும் அபிப்பிராய பேதங்களைப் பெரிதாக்கிப் பிளவைவளர்ப்பது தான் ருஷியாவின் ஏகநோக்கம் என்பது அதன் பிரசாரத்திலிருந்து தெளிவாகிறது.

## தளபதி மத்யூ றிட்ஜ்வே அவர்களின் கூற்று

நியூயோக் — வைகாசி 16

கம்யூனிஸ்தஆதிக்க பயங்கரங்களைச் சொல்லொணா அல்லற்பட்டு அனுபவ வாயிலாக அறிந்துள்ள கோறிய மக்களிடமிருந்து அமெரிக்கர் ஒரு படிப்பனையைப்பெறவேண்டும். மேற்கண்டவாறு கோறியாவில் ஐ. நா. தளபதி மத்யூ றிட்ஜ்வே, சங்.ஜோர்ஜ் சார்ஜண்ட் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகின்றார். அது வருமாறு: கோறியாவில் ஆயிரமாயிரம் ஏழை மக்கள், முதியோர், அங்கவீனர், நோயாளிகள் இரவு பகல் என்று பாராமல், கொட்டும் பனியில், தங்கஇடமில்லாமல், தூங்கி இளைப்பாறவும் இடமில்லாமல், குளிரில் ஒருவரையொருவர் இறுக அணைத்துக்கொண்டவண்ணம் தங்களது அற்பசொற்ப உடைமைகளைத் தம் முதுகுமேலோ அல்லது தள்ளுவண்டியிலோ போட்டுக்கொண்டு ஓடுகின்றார்கள். ஏன் தெரியுமா? கம்யூனிஸ்த ஆட்சியாளரிடமிருந்து உயிருக்குப்பயந்துதான். அமெரிக்கமக்கள் தங்கள் மனக்கண்ணால்பார்த்து இந்த அகதிகளின் ஓட்டத்திற்குக் காரணமாயிருக்கும் கம்யூனிஸ்த பயங்கரத்தை அறியட்டும். கோறியாவில் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பை முறியடிக்க அமெரிக்கர் முழு ஒத்தாசையும் அளிக்கட்டும் என்பதற்காகவேயாம்.

## சனதிபதிட்றூமனின் பேச்சு

வாஷிங்ரன் — வைகாசி 17

அமெரிக்கா தனது கூட்டாளி நாடுகளைப் பலம் படைத்தவைகளாக்கி வைத்திருக்கவேண்டும். இல்லாவிடில் ருஷியா அவற்றை ஒருசமயம் அபகரித்துக்கொள்ளலாம்; அதனால் யுத்த அபாயம்கூடுதலாகும். மேற்கண்டவாறு இன்று இங்கு நடந்த தேசிய பிரஜாவுரிமை மகாநாட்டிலே சனதிபதி ட்றூமன் பேசியபொழுது அழுத்தமாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"கூட்டாளிகளில்லாமல் நமது தற்காப்புத்திட்டம் அதிக சிரமப்படும்; அதினால் அதிகசெலவும்பிடிக்கும். நமது வெளிநாட்டுச் சகாயத் திட்டத்தைக் கண்மூடித்தனமாக வெட்டுவது என்பது சிக்கனமாகாது. இப்போது சிக்கனம் செய்வதுஎன்பது பிற்பாடு நமது சிப்பாய்களின் பிராணனைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் முடியலாம்.

"அமெரிக்கா பூரண பலத்துடன் இருக்கவேண்டும். நமது கூட்டாளிகள் பூரண பலத்துடன் விளங்கவேண்டும். எனவே தற்காப்பை வலுப்படுத்துவதே— அதாவது சுதந்திரஉலகின் கூட்டுப் பந்தோபஸ்தை வலுப்படுத்துவதே நமது முதல் முக்கிய வேலையாகும். சுதந்திர உலகம் அடிமை உலகம் என்னும் இரண்டிலே நாம் சுதந்திரஉலகைச் சேர்ந்தவர்கள். அன்றியும் சுதந்திரஉலகின் தலைமைப் பொறுப்பும் நமதுமேற் சுமத்தப்பட்டிருப்பதனால், நாம் அப்பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

"தற்காப்பு விருத்தித் திட்டத்திற்கு அடுத்தது பொருளாதார உறுதிப்பாடு. இதற்கு வரியை ஏற்றமாக்க வேண்டியிருக்கிறது. இதன் அவசியத்தை ஒவ்வொரு பிரசையும் நன்குணர்ந்து கொள்ளவேண்டும்."

## உதவிமந்திரி ஜோர்ஜ் மெகீ

சின்சினற்றி— வைகாசி 17

தென்ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள அபிப்பிராய பேதங்கள் "வெளிக்குத்தான் அப்படித் தோன்றுகின்றன" எனச் சமீபகிழக்கு, தென்ஆசிய, ஆபிரிக்க அலுவல்களைக் கண்காணிக்கும் அமெரிக்க உதவிஇராசாங்க மந்திரி திரு. ஜோர்ஜ் ஸி. மெகீ கருதுகிறார். இங்கு உலகவிவகாரசங்க கூட்டமொன்றிலே பேசியதிரு. மெகீ மேலுங்கூறியதாவது: இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆபுகானிஸ்தான், நேபால்முதலாம்நாடுகள் கம்யூனிஸ்த இயக்கங்கள் இழைக்கும் உள்நாட்டு அபாயத்தை நன்கு உணர்ந்து தக்கஎதிர்நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. இதுவரை தங்கள்இராசாங்க நிர்வாகத்திற்குக் கம்யூனிஸ்தார்கள் விடுத்த சவாலை இந்நாடுகள் வெற்றிகரமாகச் சமாளித்ததைக் கவனிக்கவேண்டும். இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அடிப்படைக்கொள்கை வித்தியாசம் இல்லை. இரண்டுநாடுகளின் உள்ளக் [illegible] சாந்திதான்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)



## மரண நினைவு

வெண்பா

தந்தாய்! எமைப்பிரிந்து தற்பரனின்
பொற்பாதம்
அந்தோ! அடைந்தொன்பான் ஆண்டு
சென்றும்— சிந்தையது
துன்பத்தில் தோய்ந்துநின்றோம்!
சொல்வதென்ன? மோட்சபே
ரின்பத்தில் வாழ்க! இனிது.

எங்கள் அரிய தந்தையாரும, நாரந்தனைமீசாமில் கால் நூற்றாண்டுக்கு மேல் உபதேசியாராக இருந்தவருமான திரு. வ. நீக்கிலாப்பிள்ளை அவர்கள் பரமபதம் அடைந்த 9-ம் வருட நினைவுநாள் 30-5-51 இல் வருகின்றது. அன்னவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரிய மக்கள்

## விளம்பரம்

### காரைதீவு மேற்கில் விற்பனைக்கிருக்கும் காணிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 527-ம் G. இலக்கப் பராமரிப்புத் தத்துவ வழக்கில் பிறப்பித்த உத்தரவுப்படி கீழே விபரிக்கப்பட்டிருப்பதும், காரைதீவு மேற்கு மு. ஆறுமுகத்தின் பராயமற்ற பிள்ளைகள் (1) செல்லமுத்து (2) பாலசுப்பிரமணியம் (3) இராமநாதன் (4) லோகராசா (5) வேலாயுதம் ஆகியோரினது இரு காணிகளை வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் காரைதீவு கிழக்கு பிறக்றர். திரு. ஆறுமுகம் கனகசபைக்காவது, அல்லது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டுச் சக்கிடுத்தாருக்காவது இந்த விளம்பரத் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் அனுப்பப்படுதல் வேண்டும். அதிகம் உயர்ந்த கேள்விக்காரனுக்கே ஷை காணிகள் விற்கப்படும்.

### ஆதன விபரம்:

1. யாழ்ப்பாணம் காரைதீவு மேற்கு தங்கோடையிலிருக்கும் "அத்தாய்" என்னும் காணி. பரப்பு நெல் இலா. 11 குழி 14¾. இதில் கிழக்குப்பக்கமாகப் பரப்பு நெல் இலா. 7 குழி 8¾. ஷை பர. நெல் இலா. 7 குழி 8¾ லுக்கும் எல்லை, கிழக்கு: முருகேசு பெண் தங்கம்மாவின் ஆதனம்; வடக்கு: முருகேசு பெண் தங்கம்மாவுக்கும், அம்பலவாணர் பெண் இலட்சுமிக்கும், ஆறுமுகம் கணபதிப் பிள்ளைக்குமுரிய காணிகள்; மேற்கு: கந்தையா பெண் பாறுபதிப்பிள்ளையின் ஆதனம்; தெற்கு: ஆறுமுகம் விநாயகசிவம்பிள்ளைக்கும், அம்பலவாணர் இராசரத்தினத்துக்கும் பங்காளருக்கு முரிய ஆதனங்கள். இதிற் சொரியலாய் ⅛ இல் ⅝ பங்கு. அதாவது முழுவதிற் சொரியலாய் ($\frac{5}{64}$) அறுபத்துநாலில் ஐந்துபங்கு.

2. மேற்படி தங்கோடைஇறை, "வீரசிமா" என்னும் காணி பர. நில இலா. 2. எல்லை, கிழக்கு: ஒழுங்கை; வடக்கு: ஒழுங்கையும், கணபதிப்பிள்ளை செல்லத்துரையின் ஆதனம்; மேற்கு: காசிநாதர் சண்முகத்தின் ஆதனம்; தெற்கு: காசிநாதர் கந்தையாவின் ஆதனம். இதிற் சொரியலாய் ⅛ இல் ⅝ பங்கு. அதாவது முழுவதிற் சொரியலாய் ($\frac{5}{64}$) அறுபத்துநாலில் ஐந்து பங்கு.

ஆ. கனகசபை
**A. Kanagasabai**
பராமரிப்புத் தத்துவவழக்கில் பராமரிப்புத் தத்துவகாரியின் பிறக்றர்.

காரைதீவு-கிழக்கு
10—5—51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசேவ் போல் அவர்களின்

## 1-ம் வருட மரண ஞாபகம்

இறப்பு :
**25—5—1950**

இவருடைய ஆன்ம இளைப் பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு இரந்து கிற்கும்

மனைவி - மக்கள்

---

இஸ்பிரீ. ஆக. பின்வரும்

## 2-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
( லூக். 14: 16—24 )

அக்காலத்தில் யேசுநாதர் பரிசேயருக்குச்சொன்ன உவமையாவது: ஓர் மனிதன் பெரிய விருந்தை முஸ்திப்புச் செய்து அதற்கு அநேகரை அழைத்தான். பின்பு அவன் விருந்துவேளையில், யாவும் இப்போது தயாராயிருக்கின்றமையால் அழைக்கப்பட்டவர்கள் வரும்படி அவர்களுக்குச்சொல்லத் தன்ஊழியனை அவர்களிடம் அனுப்பினன். அவர்கள் எல்லோரும் ஒருப்படப்போக்குச் சொல்லத் தொடங்கினர்கள். முதல்வன் அவனை நோக்கி: நான் ஒரு தோட்டத்தை வாங்கினேன். அகத்தியமாய்ப்போய் அதைப்பார்க்க வேண்டும்; என்னை மன்னித்துக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன் என்று அவனுக்குச் சொன்னன். வேறொருவன் : ஐந்து ஏர்எருதுகளை வாங்கினேன்; அவைகளைப் பரீட்சிக்கப் போகிறேன்; ஆதலால் என்னை மன்னிக்க உம்மை மன்றாடுகிறேன் என்றான். மற்றொருவன் : கலியாணஞ்செய்து கொண்டேன் ; ஆகையினல், நான் வரக்கூடாதென்றான். ஊழியன் திரும்பிவந்து இவைகளைத் தன்எசமானுக்கு அறிவித்தான். அப்போது குடும்பத் தெசமான் சினந்து, தன்ஊழியனைநோக்கி: நீ சீக்கிரத்தில் புறப்பட்டு, நகரத்தின் பெரிய வீதிகளுக்கும் தெருக்களுக்கும் போய்த் தரித்திரரையும் முடவரையும் குருடரையும் நொண்டிகளையும் இங்கே கூட்டிக் கொண்டு வாவென்றான். பின்பு ஊழியன் : ஆண்டவனே, நீர் கட்டளையிட்டபடியே செய்தாயிற்று. இன்னும் இடமிருக்கிறதென்று சொன்னதற்கு எசமான்ஊழியனை நோக்கி: நீ புறப்பட்டு வழிகளிலும் வேலிகளோரத்திலும்போய் என்வீடு நிரம்பும்படியாய்ச் சனங்களை உள்ளே வரும்படி கட்டாயப்படுத்து. ஏனெனில், அழைக்கப்பட்ட அம்மனிதரில் எவனும் என்விருந்தைச் சுவைபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---



## பத்திமாகிரியின் நிகழ்ச்சிகள்

—※—

யாத்திரைக் கன்னிகை 1950-ம் ஆண்டு ஆனிமாசம் 7-ந் திகதி எங்கள் பத்திமாகிரியைச் சந்தித்த ஞாபக தினம். இது ஓர் விசேஷ நாள்.

### வியாதிக்காரரின் தினம்

அன்றுகாலை 7 மணிக்குத் திவ்விய பாடற்பூசையும், சாயந்தரம் 4-30 மணிக்குத் தேவநற்கருணை எழுந்தேற்றமுஞ் செய்யப்பட்டுச் செபமாலை ஓதப்படும். பின்னர் வருத்தக்காரரைத் தேவநற்கருணைகொண்டு ஆசீர்வதிக்குஞ்சடங்கு மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்களால் நடத்தப்படும்.

எங்கள் பத்திமாகிரிப்பத்திரிகையில் பிரசுரித்த அறிவித்தலை மீண்டும் பிரசுரிக்கிறோம். அன்றுதினம் பத்திமாகிரியில் சமுகமாயிருக்க விரும்பும் நோயாளர், தங்கள்பெயர்களைக் கட்டளைக்குரவர்,பத்திமாகிரி பண்டத்தரிப்பு என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். இன்னும் அதற்கு ஆயத்தமாக அவர்கள் தங்கள் செபமாலையை விசேஷ பயபத்தியுடன்சொல்லி அவற்றோடு தங்கள்வருத்தங்களையும் எங்கள் ஆண்டவருக்கும் அவரது பரிசுத்த தாயாருக்கும் நல்ல இருதயங்களுடன் ஒப்புக்கொடுக்கும்படி கேட்கிறோம். கூடிய சீக்கிரம் தங்கள் பெயர்களை அனுப்பினல் அவற்றை நாம் பத்திமா மாதாசுரூபத்தின் பாதஅடியில் வைப்போம். பிறசமயத்தவர்களும் தங்கள் பெயர்களை அனுப்பலாம். இதை வாசிக்கும் நேயர்கள் இதைக்குறித்து அறியாதோருக்குத் தெரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

**HENRI GESLAND, O. M. I.**

---

கத்தோலிக்க

## நாளு சங்கதிகள்

—:—

—இம்மாதம் 6-ந்திகதி றோமாபுரியில் அர்ச். பேதுருவானவர் மகாலயத்தில் சீனாவின் தொங்கின்மாகாணத்தில்வேத சாட்சிகளாகமரித்த 25 பேருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டப்பட்டது. அவர்களுள்ஒருவர் மத்தியதொங்கின் மாகாண மேற்றிராணியாரான மகாவந். யோசேப் டையர் சஞ்சூர்ஜோ ஆண்டவர். இவர் 1857-ம் வருடம் 39-ம் பராயத்தில் வேதத்திற்காகக் கொலை செய்யப்பட்டார். இவர் தம்மை ஒரே முறையில் வெட்டாது மூன்று முறைகளில் வெட்டித் தமது மரண வேதனையைச் சிறிதுநேரம் நீடிக்கச் செய்யுமாறு தமது கொலைஞனுக்கு ஓர்வெகுமதி கொடுத்தார். தமது நீடித்த மரண வேதனையைத் தமதுமந்தையிலுள்ளவர்களுக்காக ஒப்புக்கொடுத்தார். இவர் ஸ்பானிய தேசத்தவர். இவரோடு, இவருக்குப்பின் தொங்கின் மேற்றிராணியாராகவந்த மகாவந். மெல்கியோர் கார்சியா சம்பேதுரு ஆண்டவருக்கும் முத்திப்பேறுபட்டம் சூட்டப்பட்டது. இவ்விருவரும் ஐரோப்பியர். ஏனைய 23 பேரும் சீனதேசத்தவர்கள். அவர்களில் இருவர் அர்ச். சாமிநாதர்சபையைச் சேர்ந்த குருமார்—வண. டொமினிக் மாவுச் சுவாமியாரும், வண. யோசேவ் தூவன் சுவாமியாரும். இருவர் அர்ச். சாமிநாதர்சபையைச்சேர்ந்த நவசந்நியாசிகள்.— வண. டொமினிக் காம்சுவாயாரும் வண. தோமாஸ் குவாங்சுவாமியாரும். ஏனையோர் பொதுமக்கள்— சிலர் பிரபுக்கள்—மற்றவர்கள் வறிஞர். இவர்களுள் மூவர் வறிய மீன்பிடிகாரர்—பீற்றர் தூவன், டொமினிக் தேஔய், டொமினிக் உவைவன். இவர்களுள் டொமினிக்உவைவன் என்பவரை வேதத்தை மறுதலிக்காததினல் மூங்கிலால் செய்யப்[illegible]து எரித்துக்கொன்றார்கள். இம்மாகாணத்தில் வேதசாட்சிகளாகமரித்த 77 பேருக்கு 1900-ம் ஆண்டிலும், வேறு 3 பேருக்கு 1906-ம்ஆண்டிலும் முத்திப்பேறுபட்டம் சூட்டப்பெற்றது. இவ்வேதசாட்சிகள்எல்லோரும் தொங்கின்மாகாணத்தில் கிறீஸ்தசமயத்தைப்போதித்த அர்ச். சாமிநாதசபையாரின் ஞானக்கனிகளே.

—எகிப்தில் இலவசக்கல்விப் பாடசாலைகளைநிறுவ ஏற்படுத்திய கத்தோலிக்கர்சங்கம், முதல் பத்துவருடங்களுள் 128 பாடசாலைகளையும் 100 வைத்தியசாலைகளையும், அநேக கோவில்களையும் எகிப்திய கிராமங்களில்ஏற்படுத்தியிருக்கின்றது. அதற்கு ஒருலட்சம்ரூபா செலவழித்திருக்கின்றனர். இப்பள்ளிக்கூடங்களில் 12,000 மாணவர் கல்விபயில்கின்றனர். அதில் ஒவ்வொரு கத்தோலிக்க மாணவனுக்கும் 20 கத்தோலிக்கரல்லாத மாணவர்கள்வீதம் கல்விகற்கின்றனர். இச்சங்கத்தை ஏற்படுத்தியவர் வண. ஐறாற் சுவாமியாராவர்.

— ஆபிரிக்க, இந்திய தேசங்களுக்கூடாகப் பிரயாணஞ்செய்த பாத்திமா மாதாவின் திருச்சுரூபம் அவுஸ்திரேலியாவின் மெல்பேண்நகரை அடைந்த போது அங்கு 50,000பேர் மாதாவைச் சந்தித்தனர். 87 வயதுள்ள மகாவந். மனிக்ஸ் அதிமேற்றிராணியார் சுற்றுப்பிரகாரத்தோடு சென்று, திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் கொடுத்தார். அன்று குடும்பச்செபமாலை ஓதும் இயக்கமும் தொடங்கபெற்றது. தேவதாயாரின் திருச்சுரூபம் அவுஸ்திரேலியாவில் திருயாத்திரைசெய்தபின் அமெரிக்காவுக்குச்சென்று ஈற்றில் பரிசுத்தபாப்பரசரிடம் செல்லும்.

—விமானியில்லாமலே 'ஜெற்' விமானங்களை ஓட்டிச்செல்லக்கூடிய ஓர் நவீனயந்திரத்தை 5-4-41ல் கண்டுபிடித்ததற்காகத் திரு. வில்லியம் [illegible] 43 வயதுள்ள அமெரிக்க விஞ்ஞானிக்குக் 'காலியர் விமானக் கலைப்பரிசு' வழங்கப்பட்டது.

---

## செம்பியன்பற்று

### அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

செம்பியன்பற்றிலே கோவில்கொண்டிருக்கும் அர்ச். பிலிப்புநேரியார் திருநாள் வழமைப்பிரகாரம் இம்மாசம் 17-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26-ந்திகதிகாலை பாடற்பூசையோடும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும் முடிவாகும்.

ஓர்சிறந்த நாடகம் 26-ந்திகதிஇரவு நடைபெறும்.

கிட்டத்தட்ட கோவில்முகப்புவரையும் தெருப் போடப்பட்டிருப்பதால் மோட்டர்கார் முதலிய வாகனங்களை நேரே கோவிலடிக்குக் கொண்டுவரலாம்.

கட்டளைக்குருவானவரின் உத்தரவின்றிக் கோயில்வளவுக்குள் எவரும் மெழுகுதிரி விற்பனைசெய்யக்கூடாது.

N. O. பஸ்கம்பெனியாருடன் ஒழுங்குசெய்யப்பட்டபடி 24,25, 26-ந் தேதிகளில் யாத்திரிகளை ஏற்றிஇறக்க பஸ்வசதிகள் இருக்கும்.

எஸ். ஏ. ஞானப்பிரகாசம்
கட்டளைக்குரு

செம்பியன்பற்று
15-5-51.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமாநாயகியின் அருளினலும், பதிவைப்பதியரான அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டினலும் எனது சகோதரியின் கழுத்திலிருந்த வருத்தம் சத்திரசிகிச்சை மூலம் குணப்பட்டது. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமங்கள் மேன்மேலும் புகழப்படுவதாக.

கொழும்பு **M. S. P.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

வைகாசிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 25 | அர்ச். கிறகோரியார் | (வெ) |
| சனி | 26 | அர்ச். பிலிப்புநேரியார் | (வெ) |
| ஞா | 27 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 2-ம் ஞாயிறு — அர்ச். வண. பீட்டப்பர் | (வெ) |
| திங் | 28 | அர்ச். கந்தர்புரி அகுஸ்தீனு | (வெ) |
| செ | 29 | அர்ச். பாசி மரியமதலேனம்மாள் | (வெ) |
| புத | 30 | அர்ச். பெலிக்ஸ் | (வெ) |
| வியா | 31 | அர்ச். மெரிசி அஞ்சேலம்மா | (வெ) |

சத்தியவேத
# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
வைகாசிமாதம் 24-ந் திகதி

பாஷையூர்
## அர்ச். அந்தோனியார் திருப்பதியின்
# நூற்றாண்டு விழாக்
## கொண்டாட்டம்



**1951-ம் ஆண்டு ஆனிமாசம் 1—13.**

ஆனிமாசம் 1—11 மாலை 7 மணி:— செபமாலை, பிரசங்கம், வேஸ்பர் - சற்பிரசாத ஆசீர்வாதம்.

,, 12 மாலை 7 மணி:— செபமாலை, பிரசங்கம், மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணியாரால் வேஸ்பரும் - சற்பிரசாத ஆசீர்வாதமும்.

,, 13 காலை 5—6 மணி:— திவ்வியபூசைகள்.
,, 7 மணி:— மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்களால் பெரியபாடற்பூசை.
,, மாலை 4-30 மணி:— செபமாலை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், ஆசீர்வாதம்.

கட்டளைக் குரவர்
பாஷையூர் — யாழ்ப்பாணம்

## மரியாயின் சேனை

[மருதமடுத்திருப்பதியிலே மரியாயின்சேனை மகாநாடு தொடங்கி மங்களகரமாக முடிவுற்றிருக்கும் இற்றை ஞான்று, மரியாயின்சேனை யென்றாலென்ன? அதன் குணாதிசயங்கள் எவை? அதன் சேவையென்ன? என்பனவான விஷயங்களைப்பற்றி ஆராய்வது நலன்எனக் கருதி "மரியாயின்சேனை" எனும் மகத்தானநூலுட் கண்டவற்றுட்சிலவற்றைக் தருதும்.]

மரியாயின் சேனையென்பது கத்தோலிக்கரை அங்கத்தினராய்க்கொண்ட ஓர்சங்கம். திருச்சபையானது உலகத்தையும் அதன் துஷ்ட சக்திகளையும் எதிர்த்து ஓயாது ஆடிக்கொண்டிருக்கும் போரில் தொண்டு செய்வதற்காகவே கத்தோலிக்கர் இச்சங்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டிருக்கின்றனர். இச்சங்கம் திருச்சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. சந்திரனைப்போல் அழகுசௌந்தரியமுள்ளவளும், சூரியனைப்போல் பிரகாசம்உள்ளவளும், போர்க்களத்தில் அணிவகுக்கப்பட்ட சேனையைப்போல் சாத்தானையும் அவன்சைனியங்களையும் நடுநடுங்கச்செய்பவளும், வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியுமான அமலோற்பவ நாயகியைத் தலைவியாகக்கொண்டிருக்கிறது. பிரமாணிக்கம், புண்ணியங்கள், மனோபலம் இவைகளால் சேனையாளர் தங்களை மோக்ஷஇராக்கினிக்குப் பாத்திரவான்களாக்கிக் கொள்ளக் கருதுகின்றனர். ஆதலின் மரியாயின்சேனை ஓர்சைனியத்தைப் போல் அமைக்கப்பட்டிருக்கிறது. பூர்வீக ரோமைச்சைனியத்தின் நாமங்களையும் அது சுவீகரித்திருக்கிறது. ஆனால் மரியாயின்சேனையும், அதனுடைய ஆயுதங்களும் பூலோக சம்பத்துக்களின் கையிருப்பிற்கானவையல்ல.

மரியாயின்சேனை இப்பொழுது ஓர்பெரிய சேனையாயிருக்கிறது. ஆனால், ஆரம்பத்தில் அதில் மிகச் சொற்பப்பேரேயிருந்தனர். ஓர்சங்கத்தை ஆரம்பிக்குமுன் எத்தனையோ முன்யோசனைக்கூட்டங்கள் கூடுகிறார்கள். எத்தனையோபேர் எத்தனையோ முறை கூடிக்கூடி ஆலோசித்துச் சட்டதிட்டங்களை ஏற்கெனவே வகுக்கிறார்கள். ஆனால் மரியாயின்சேனை ஆரம்பமாகுமுன் இத்தகைய ஆரவாரங்கள் இருக்கவில்லை. அது தானாகவே உண்டாகியது. ஓர்யோசனை எழுந்தது. ஒருமாலையில் ஒருசிலர் ஒன்றுதிரண்டனர். அணைகடந்தஅன்பால் அனைவரையும் கடாக்ஷிப்போன், அவர்களைத் தம்முடைய ஆயுதங்களாகப்பிரயோகிக்கச் சித்தம் வைத்திருந்தானென்பதை அவர்கள் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. இன்றுஉலகத்தின் எத்திசையிலும் சேனையின்கூட்டங்கள் எப்படி நடைபெறுகின்றனவோ அப்படியே அன்றையதினம் அக்கூட்டம நடைபெற்றது. அவர்கள் ஓர்மேசையைச்சூழ்ந்திருந்தார்கள். அந்த மேசை ஓர்சாமானிய பீடத்தைத்தாங்கி நின்றது. பீடத்தின் மத்தியில் சுத்த வெண்மையான துணிமேல் அமலோற்பவநாயகியின் திருச்சுரூபம் ஒன்றிருந்தது. அதன்சாயல் அற்புத பதக்கத்தில்இருக்கும் [The Miraculous Medal] மாதாவின்சாயலை ஒத்திருந்தது. திருச்சுரூபத்தின் இருபுறங்களிலும் இருபூச்சாடிகளில் இருபூங்கொத்துகளிருந்தன. இரு தீபக்கால்களில் இருவர்த்திகளும் எரிந்துகொண்டிருந்தன. பீடத்தின்அமைப்பு அர்த்தந் ததும்பியதாயிருந்தது. முதன்முதல்வந்தவர்களுள் ஒருவர், தெய்வீகஏவுதலால் அந்த அமைப்பைத் தீர்மானித்தார். மரியாயின்சேனைக் கொள்கைகள் அனைத்தும் அதில் அறியக்கிடந்தன. மரியாயின்சேனை ஓர்சைனியம். அவர்கள் அங்கு கூடுவதற்கு முன்னரே அவர்களுடைய இராணி அங்கிருந்தாள். அவர்கள்தன்னிடம் வருவார்கள்என்பதை அறிந்திருந்த அந்தஇராணி, அவர்களைச் சேனையில் சேர்ப்பதற்காக அங்கு தயாராகக் காத்துக்கொண்டிருந்தாள். அவர்கள் அவளைச் சுவீகரிக்கவில்லை. அவளே அவர்களைச் சுவீகரித்தாள். அதுமுதற்கொண்டு அச்சேனை அவளுடனேயே பெயர்ந்துசென்று அவள்பக்கமேநின்று போர்பொருதுவந்திருக்கிறது. ஏனெனில், எவ்வளவு அவளுடன் ஒன்றித்திருக்கிறார்களோ அவ்வளவே தங்களால்விடா துழைக்கவும், ஜெயமடையவும் முடியுமென்பதை அவர்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள்.

எல்லோரும்முழந்தாட்படியிட்டார்கள். இதுவே அந்தச் சேனையாளர் சங்கமாக ஏகோபித்துச் செய்த முதற்சடங்கு. பின்னர் அந்த யௌவனர் தலைகுனிந்து இஸ்பிரீத்துசாந்துசெபம்சொன்னார்கள். இஸ்பிரீத்துசாந்து செபம் முடிந்தபின் நாள் முழுவதுங் கஷ்டப்பட்டு உழைத்தவர்களிடையே செபமாலைமணிகள் உருண்டன. கடைசிவேண்டுதல்கள் முடிவடைந்தபின்னர் எல்லோரும் எழுந்து உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தபின் மரியாயின் ஆதரவின்கீழ் (சுரூபத்தின் மூலம்) ஆலோசனையை [illegible]தார்கள். எந்தவழியில் சர்வேஸ்பரனுக்கு உத்தம உகப்பு அளிக்கலாமென்பதைப் பற்றியும் ஆலோசனைசெய்தார்கள். அந்தஆலோசனையே இன்றிருக்கும் மரியாயின்சேனையை அதன் இப்போதைய சகலஇலட்சணங்களுடனும் ஈன்றது.

என்னஆச்சரியம்! அற்பர்களாகியஅவர்கள் அங்கு கூடியிருந்து ஏதோ தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டிருந்ததைக் கண்ணுற்றவர் எவராலும் அவர்கள்மூலம் நிறைவேறவிருந்த தேவசித்தத்தை அப்பொழுது உரூபிகரித்தறிந்திருக்கமுடியுமோ? அவர்கள் அன்று அபிஷேகம்பண்ணிக்கொண்டிருந்த முறையானது ஓர்புதியஉலகசக்தியாப் ஊடாடிவருமென்றோ, உண்மையாயும் பலமாயும் நிர்வகிக்கப்படில் அந்தப்புதிய சக்தியானது மரியாயின்உதவியால தேசங்களுக்கு உயிரும் இன்பமும் நம்பிக்கையும் அளிக்குமென்றோ, எவராலும் அப்பொழுது உரூபிகரித்தறிந்திருக்கமுடியுமோ?

அயர்லாந்துதேசம், டபிளின் மாநகரம், பிரான்சீஸ்வீதி, மிராஹௌஸ் என்னும் இல்லத்தில் 1921-ம் வருடம் புரட்டாசிமாசம 7-ந்திகதி தேவமாதா பிறந்த திருநாள் வெஸ்பர்ஸ் தினம், மாலை 8 மணிக்கு மரியாயின் சேனைக்கு முதன்முதல் ஆள் சேர்த்தார்கள். அந்தத் தாய்க்கிளைக்கு "இரக்கத்தின்மாதா" என்று பெயரிட்டார்கள். ஆதலினலேயே தாபனம் முழுவதற்கும் "இரக்கத்தின்மாதாசங்கம்" என்று சிலகாலம்வரை பெயர் வழங்கிவந்தது.

தேதியை நிச்சயித்த சந்தர்ப்பங்களைத் தற்செயலாய் ஏற்பட்ட சந்தர்ப்பங்களென்றே எவருங்கருதுவர். அதற்கு அடுத்த தினமாகிய தேவமாதா பிறந்த திருநாளே அதைவிடப் பொருத்தமான தினமாயிருந்திருக்குமென்று அப்பொழுது தோனறியது. சிலவருடங்கள் கழிந்தபின்னரே, மாதா அவளுடைய கருணையைக் கணக்கற்ற காரியங்களில் வெளிப்படுத்திய பின்னரே, சேனை ஜெனித்த கணத்தை மரியாயே நிர்ணயித்தாளென்று உணர்ந்தனர். "மாலையும் காலையும் சேர்ந்து முதல்நாளாயிற்று" (ஆதியாகமம் 1. 5.) மரியாயைப் பிரதிபிம்பித்துக் கர்த்தரைஉத்தமவிதம் மகிமைப்படுத்துவதையும் அவரை உலகத்தவருக்கு அறிவிப்பதையும் தன்னுடைய பிரதான இலட்சியமாகவும், மாறாதஇலட்சியமாகவும் கொண்டிருக்கும் ஓர்தாபனம் ஜெனனமாவதற்கு மரியாயின் ஜெனனத்தைக் கொண்டாடும் திருநாளின் இறுதி நறுமணங்களல்ல, முதல் நறுமணங்களே பொருத்தமான நேரம்.

அங்கத்தினர்களைச் சுத்திகரிப்பதே சேனையின் நோக்கம். அதற்கு அது இரண்டு கடன்களை விதிக்கிறது. ஒன்று செபம்; மற்றொன்று ஊழியம்: சர்ப்பத்தின் சிரசைநசுக்கி கிறீஸ்துவின் இராசரீகத்தைப் பெருக்குவதற்கு மரியாயுடனும், திருச்சபையுடனும் ஞானமேய்ப்பர்களின் ஆதீனத்திற்குக் கீழ்ப்பட்டு ஒத்துழைக்கும் ஊழியம். திருச்சபையின் சேமத்திற்குப் பிரயோசனமானதென்றும், சேனையாளருக்கு இசைந்ததென்றும் தாங்கள் கருதும் சகலவிதமான சமூகசேவைகள் கத்தோலிக்கு ஊழியங்களுக்கு கன்ச்சீலியத்தின் (Concilium) சம்மதம்பெற்றும் சேனைப்புத்தகத்தில் கண்டிருக்கும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டும் மேற்றிராணிமார்களும் குருமார்களும் மரியாயின் சேனையைஉபயோகப் படுத்தலாம். பங்குக்குரவர் அல்லது மேற்றிராணியார் அங்கீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST. ANTHONY'S CHURCH,
## PASSAYOOR, JAFFNA.

### CENTENARY CELEBRATIONS

June 1—11 : 7 p. m. Rosary, Sermon, Vespers, Benediction.

June 12 : 7 p. m. Rosary, Sermon, Pontifical Vespers & Benediction by His Lordship the Bishop of Jaffna.

June 13 : 5 a. m. & 6 a. m. Low Masses
7 a. m. Pontifical High Mass by His Lordship the Bishop of Jaffna.
4-30 p. m. Rosary, Procession with the Statue of St. Anthony Benediction.

**Parish Priest,**
Passayoor, Jaffna.

காரமின்றி, ஏதேனுமொருபங்கில் இந்தச்சேவைகளில் ஏதேனுமொன்றில் சேனையாளர் தலையிடமாட்டார்கள்.

மரியாயின் குணாதிசயங்களே சேனையின் குணாதிசயங்கள். மரியாய் ஆழ்ந்ததாழ்ச்சியுடையவள். மட்டற்ற கீழ்ப்படிதலுள்ளவள். இடையருது செபிப்பவள். எதையும் ஒறுக்கப் பின் வாங்காதவள். அற்பமும் பழுதற்றகற்புடையவள். சலியாத பொறுமையுடையவள். தெய்வீகமனோதைரியமுள்ள தேவசிநேகமுள்ளவள். ஒப்பற்ற உத்தமவிசுவாசங் கொண்டவள். சேனையானது அவளுடைய விசுவாசத்தையும், தேவசிநேகத்தையும், ஞானத்தையும் பொறுமையையும் ஒறுத்தலையும் செபபக்தியையும் இங்கிதத்தையும் கீழ்ப்படிதலையும் தாழ்ச்சியையும் அடையமுயற்சிக்கிறது. அவளுடைய சிநேகத்தையும் விசுவாசத்தையும் பின்பற்றிச் சகலவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளுகின்றது. "முடியாதென்பது அதற்கொரு சாக்குப்போக்காகாது; ஏனெனில், எல்லாந் தன்னால் முடியுமென்றும் செய்யச் சுதந்திரமுண்டென்றும் எண்ணுகின்றது" (கிறீஸ்துநாதர் அனுசாரம் 3: 5.)

## சுதேச வர்த்தமானம்

### பரிசளிப்பு விழா

ஜா-எலாவிலுள்ள ஸ்தெலாகல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா ஆனிமாசம் 9-ந்திகதி கலாசாலைமண்டபத்தில் அதிசிறப்பாய் நடந்தேறும். வியாசப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசுகளும், பாராட்டுப்பத்திரங்களும் வழங்கப்பெறும்.

1-ம்பரிசு—100 ரூபாவும் ஆங்கில இலவசப்படிப்பும்
ஸ்ரீமதி கே. ரீ. ஞானப்பிரகாசம், ஆசிரியை. அர்ச். தோமஸ் கன்னியர் மடம், பருத்தித்துறை.

2-ம்பரிசு—75 ரூபாவும், ஆங்கில இலவசப்படிப்பும்.
வண. ஜீ. தேவானந்ததேரு, கணேமுல்லை.

இன்னும் 11 மாணவர்களுக்குரொக்கப்பரிசும், 37 மாணவர்களுக்குப் பாராட்டுப்பத்திரங்களும்வழங்கப்படும்.

### வயோதிபர் விடுதிச்சாலை

மன்னார் பட்டினத்தில் ஓர்வயோதிப விடுதிச்சாலையின் அவசியத்தைக்குறித்துச் சென்ற 20-ந்திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் அப்பட்டின சங்கத் தலைவர் கொணர்ந்த பிரேரணை

## பாடசாலைக்கோணம்

இதேபெயருடன் இடையிடையே காவலனில் தோன்றும் பகுதியை, ஆசிரியர்களும் பெற்றோரும் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தங்கள் பிள்ளைகள் வேதகாரியங்களில் தேர்ச்சியடைவதற்கு இன்றியமையாத ஒருவழி இதுவாயிருப்பதால், அவர்களை இதிற் பங்குபற்றும்படி தூண்டிவிடுவது பெற்றோர் ஆசிரியர்களின் கடமை.

பின்வரும் வினாவிற்குத் திறமானவிடை யெழுதியனுப்பும் மாணவர்களுடைய பெயர்களும் பாடசாலையின் பெயரும், பாதுகாவலனில் பிரசுரம் பண்ணப்படும். தங்களது பிள்ளைகளின் நாமங்களைப் பிரசுரத்திற்கண்டு மகிழும் பெற்றோரினதும் ஆசிரியரினதும் மகிழ்ச்சியே மகிழ்ச்சி.

கீழ்க்காணும் வினாவிற்குரிய விடையை, ஆங்கிலத்தில் அல்லது தமிழில் 9-6-51-க்கு முன் எழுதி Rev. Fr. B. E. Alfred, O. M. I. Bishop's House, Jaffna. என்னும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

வினா: கிறீஸ்துவ பிள்ளையாகிய உமக்கும், பிறசமயப் பிள்ளையாகிய உமது உடன்மாணவ மாணவ (வி)னுக்குமிடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளென்ன?

## பெரிய குறிப்பிடம்

விற்பனைக்குத் தயாராயிருக்கிறது.
பிரதி விலை சதம் 30.

ஏகமனதாய் நிறைவேறியது. மன்னார்ப் பட்டினசங்கத்தில் போதியநிதியில்லாத காரணத்தால் சமூகசேவா மந்திரியாரிடம் அதற்கு உதவிகேட்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### களத்துவீவாத் திட்டம்

களத்துவீவாத் தண்ணீர்த்திட்டம் அரைகுறையாக வேலைமுடிந்திருக்கின்றது. பணமின்மையால் எஞ்சியவேலை தடைப்பட்டிருக்கிறது. தொழிலாளரின்குறைவு காரணமாகவும், சீமெந்து உருக்குமுதலிய பொருட்களின் தட்டுப்பாடுகாரணமாகவும் தண்ணீர்த் திட்டவேலை மும்முரமாக நடைபெறவில்லை. இத்திட்டத்தைப் பூர்த்தியாய் முடிப்பதற்கு நிதிதிரட்டும் வழியைப்பற்றி ஆலோசனை நடைபெறுகின்றது.

## பிதாவை மனந்திருப்பிய பிள்ளை

"ஆனந்தம்! பூசைமுடிந்ததும் முடியாமுன்னமே இவ்வளவு அவசரமாக ஓடுகின்றாயே! எங்கே போகின்றாய்?" எனப்பூசைக்கு உதவியபின் தீவிரமாக வெளியே சென்ற சிறுவனை வண. அந்தோனிச் சுவாமியார் கேட்டார்.

இந்தக் கேள்வியைச் செவியுற்ற 10 வயதுச் சிறுவனான ஆனந்தம் சற்றுப் பயந்து, வெட்கத்தால் வெளுத்தமுகத்துடன் சுவாமியாரைப்பார்த்து "என் தந்தையார் எனக்கோர் அழகியபந்தும், பந்தடிதண்டும் வாங்கிக்கொடுத்திருக்கிறார். பள்ளிக்கூடம் போவதற்கு முன்னமே, ஒரு ஆட்டம் ஆடலாமெனச் செல்லுகிறேன் சுவாமி என அவசரமாகப்பதிலிறுத்தான்.

"ஆனால், இதோபார் தம்பி! நீ யேசுநாதசுவாமியை வெகுவாக அலட்சியம் பண்ணுகிறாய். இதற்கு முன்னே நீ திவ்வியநன்மை வாங்கியபின், சற்பிரசாதநாதருக்கு நன்றியறிந்ததோத்திரஞ் சொல்லுவதில் பத்துநிமிஷங்களாகிலும் செலவழித்துவந்தாய். இப்போது நீ அவ்வண்ணம் செய்வதில்லையே. ஏன்?"

"இல்லை சுவாமீ! இப்போது கொஞ்சம் செபங்கள் மாத்திரம் செய்தேன். மற்றதைப் பின்னால் செய்வேன்."

"இவ்வாறு பத்திமுயற்சிகளைப் பின்னே செய்வோம் என்று தள்ளிவைப்பது தேவனுக்குப் பிரியப்படாது. அந்த அன்புள்ள தகப்பனிடத்தில் இவ்வளவு அசட்டைத்தனமாகவும், அவசரமாகவும் நடந்துகொள்வது அழகோ?" இதைக்கேட்ட சிறுவன் தலைகவிழ்ந்து கொண்டு பேசாதுநின்றான். சுவாமி

***********************
— K. K. J. —
***********************

யார் பின்னும் அவனைநோக்கி, "பள்ளிக்கூடத்திலிருந்து பகற்போது வருகிறாயே; அப்போது அந்தப்பந்தாட்டம் ஆடலாகாதா? அல்லது பின்னேரம் பள்ளிக்கூடம் விட்டுவந்தபின் ஆடலாமே. அதுவன்றோ பந்துவிளையாட்டுக்குப் பொருத்தமானகாலம். எப்போதும் வேலை செய்யவேண்டுமென்றாவது, ஒருசிறிதும் விளையாடலாகாதென்றாவது நான் சொல்லவரவில்லை தம்பி! ஆனால், இது மிக்கவிலையேறப்பெற்ற அதிபரிசுத்தமான நேரமென்பதை நினைவுகூர்வாயாக. திவ்வியயேசுநாதரை இப்போது நீ கண்ணாரக் காண்பாயாகில் அவரை இம்மாதிரி அலட்சியம் பண்ணுவாயோ?" என்றார்.

இதைக்கேட்ட ஆனந்தம் மிகக்கிலேசங்கொண்டு சுழித்தமுகத்துடன் சென்றான். அந்தோனிச் சுவாமியார் சொன்ன உபதேசம் அவனுக்கு உடன்பாடாகவில்லை. பந்தாட்டத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தான். "காலையில் பந்தாடுவதைவிடேன். அதனால் என்னநட்டம் வந்துவிட்டது? இதற்காகச் சுவாமியார் மிக்கஆத்திரப்படுகிறாரே!" என்று தனக்குள்ளே தானே சொல்லிக்கொண்டான். இப்படி அவன் சொன்னது எவர் காதிலும் படவில்லை. ஆனால் கடவுளும் அவனுடைய காவலானசம்மனசுங் கேட்டார்கள். அவ்வார்த்தைகள் அவ்விருவருக்கும் எவ்வளவோ மனவருத்தத்தைத் தந்தன.

இது நடந்து சிலவருடங்கள் கழிந்தன. ஆனந்தம பதினைந்தாவது வயதை அடைந்தான். அந்தோ! அவன் அப்போது பெரிதும்மாற்றமுடையவனாகக் காணப்பட்டான். அவனுடைய பத்தியெல்லாம் அவனைவிட்டுப் பறந்தோடிப்போயிற்று. பூசைக்கு மாத்திரம் வழக்கம்போல உதவிவந்தான். ஆனால் முன்போல அடிக்கடி சற்பிரசாதம் உட்கொள்ளுவதில்லை. அளவுகடந்தவிதமாகப் பந்தாட்டத்திற் பிரீதிவைத்ததின்பலனாகப் பாவசங்கீர்த்தனத்துக்குத் தக்கஆயத்தம் பண்ணுவதில்லை. நன்மை வாங்குமுன்னும் பின்னும் சொல்லவேண்டிய செபங்களை அவசர அவசரமாகச் சொல்லுவான். அவனதுகவனமெல்லாம் பந்தாட்டத்திற் சென்றுகொண்டிருக்கும். இதுவே அவனது பத்திக்குறைவிற்குக் காரணமாகவிருந்தது. இது மாத்திரமல்ல: சிலவருடங்கள் சென்றபிறகு, நாஸ்திகக்கொள்கையுடைய அழகியமங்கையைக்கண்டு, அவர்மீது காதலுற்று, அவளை மணப்பதற்குப் பெற்றோரும், குருமாரும் இசையாததினால், அரசாங்கஉத்தியோகஸ்தர் முன்னிலையிற் போய், "றிஜிஸ்தர்" கலியாணம் செய்துகொண்டான். இந்தச்செய்தி கேட்ட அவன் தாய் தந்தையர் மனம் முறிந்தது. அவர்கள் என்செய்வார்கள்? கடந்தஒருவருட காலமாக அவனுக்கு எவ்வளவோ புத்திசொல்லிப் பார்த்தார்கள். அவன் அவர்கள் வார்த்தையைச் சற்றுஞ்சட்டை செய்யாமல், பாவசங்கீர்த்தனஞ் செய்வதையும் நன்மைவாங்குவதையும் அறவேவிட்டு, வேதவழியையொழித்து நடந்தான். ஞாயிற்றுக்கிழமைப் பூசையுங் காண்பதில்லை. கேட்டுக்கு இன்னுந்தான் என்ன வேண்டும்? அநியாயமாய்க் கெட்டான்.

"றிஜிஸ்தர்" கலியாணம்செய்த 10 வருடங்களுள் பலபிள்ளைகளைப் பெற்றான். அப்பிள்ளைகளுள் ஒன்றேனும் ஞானஸ்நானம் பெறவில்லை. ஆனந்தம் முற்றுமே கோவிலையும் மறந்தான். கடவுளையும் மறந்தான். எனினும் அவன் செய்துவந்த வியாபாரத்தில் நல்லலாபம் கிடைத்தது. அடுத்தகிராமமொன்றில் ஒருவீட்டைச் சொந்தமாக வாங்கிக்கொண்டு, அதிற்போய் மனைவிமக்களோடு வசித்துவந்தான். மனைவியானவள் கடவுளில்லை என்னும் நாஸ்திகமதங் கொண்டவளானபடியால், தன்பிள்ளைகளை மிருகங்களுக்கொப்பாகத் தெய்வபயமில்லாதவர்களாய் வளர்த்துவந்தாள்.

இவர்கள் வீட்டுக்கருகே ஒருசிறு கத்தோலிக்ககுடும்பம் வசித்துவந்தது. தாயும் தகப்பனும், அவர்களுடைய மகனுமாகிய மூவரே அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அந்தச்சிறுவன் பெயர் அருளப்பு. இவனுக்கு வயது ஒன்பது. பத்தியுள்ளவன். கோவிலுக்கு நாளாந்தம் போய்ப்பூசைக்கு உதவுவான். இந்தப்பையனும் மேற்கண்ட நாஸ்திகக் குடும்பத்துப் பிள்ளைகளும்சேர்ந்து விளையாடுவதுவழக்கம். சிலவேளைகளில் உலாவப்போவதும் உண்டு. ஆகவே, ஒருநாள் மாலை அருளப்பு அப்பிள்ளைகளுள் மூத்தவனும், தனக்குச்சரியொத்தவயதினனுமாகிய மாணிக்கம் என்பவனைத் தேவநற்கருணை ஆசீர்வாதத்துக்கு அழைத்துக் கொண்டுபோனான். ஆசீர்வாதத்தின் போது, கோவிலில்நடந்த பூசிதமான சடங்குகளையெல்லாம் கவனித்த மாணிக்கம் தன்வீட்டுக்குத் திரும்பியவுடன் தன்தகப்பனைநோக்கி அவைகளின் அர்த்தமென்னவென்று பல கேள்விகளைக் கேட்டான். தகப்பன் அவைகளைப்பற்றி நன்றாகத் தெரிந்துள்ளவனானபடியால் ஒருவாறு அவனுக்கு அவைகளை விளக்கிக்கூறினான். இவைகளைக் கேட்டமகன், "அப்பா! நீங்கள் எப்போதாகிலும் கத்தோலிக்கராயிருந்திருக்கின்றீர்களோ" என வினவினான்.

(தொடரும்)

—கோறியா யுத்தத்திட்டங்களைப் பற்றித் தூரகிழக்குத் தளபதியின் ஆதரவுடன் கவனிக்கத் தவறியதால் மக்ஆர்தர் பதவிநீக்கஞ் செய்யப்படவேண்டுமென்று இராணுவ ஆலோசகர்சபை சிபாரிசுசெய்ததாக ஜெனரல் ஓமர் பிராட்லிஎன்பவர் சாட்சியங் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணசங்கதி

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி வாசராய், பலராலும் நன்கறியப்பெற்றவராயிருந்து காலஞ்சென்ற திரு. எம். வஸ்தியாம்பிள்ளை அவர்களின் ஏகசகோதரரான திரு. எம். யோசேப் அவர்கள் சிலவாரங்களாக நோய்கண்டு யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியிலே சத்திர வைத்திய சிகிச்சைக்குள்ளாய்க் காத்திராப்பிரகாரம் சென்ற 18-5-51 வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் காலஞ்சென்ற துயர செய்தியறிந்து மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்கு வயசு 60. இவருக்கு மூன்று புத்திரரும், நான்கு புத்திரிகளும் உள்ளனர். புத்திரிகளில் ஒருவர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னிகாமடத்து ஆங்கில உயர்தர கலாசாலையில் ஆசிரியையாயிருந்துவருகின்ற சிஸ்றர் மேரி பிறசிடா அவர்கள். மற்றொருவர் சுகாதார பரிசோதகரான திரு. பி. வின்சென்ற் அவர்களின் பாரியாரான திருமதி தெரேஸ் எனபவர். திரு. செல்வநாயகம் பாக்ஸ் வஸ்தியாம்பிள்ளைக்கும், திரு. பேரின்பநாயகம் வஸ்தியாம்பிள்ளைக்கும் இவர் சிறியதந்தையராவர். தமது சகோதரர் காலஞ்சென்றபின் யாழ்ப்பாணத்திலே பிரஸ்தாபம்பெற்ற எம். வஸ்தியாம்பிள்ளை சாய்ப்பை அவர் புதல்வர்களுடன் முன்போல இவர் ஊக்கமாக நடத்திவந்தார். இவரின் பிரேதசேமமானது மறுநாள் சாயந்தரம் திரளான இனசனர் சிநேகிதர்கூடியசமூகத்திலே மூன்று குருமார் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, புதியகல்லறையில் சிறப்பாக நடந்தேறியது. இவரையிழந்து துன்புறும் மனைவி, மைத்துனி, மக்கள், மருகர், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## மரணசங்கதி

அடம்பன் விசாரணைப்பங்கைச் சேர்ந்த கண்டலைத் தனது இருப்பிடமாகக் கொண்டவரும், மன்னார்-மாதோட்டப்பகுதிகளிலே யாவராலும் நன்கறியப்பட்டவரும், செல்வஞ்செல்வாக்கில் சிறந்தவரும், தற்போது முருங்கன்பகுதியிலே கடமையாற்றிவருகின்ற திரு. எஸ். செபமாலை V.C.O. அவர்களின் தந்தையும், மாந்தை தெற்கு உணவுஉற்பத்தி இன்ஸ்பெக்றர் திரு. தோமஸ் இராசையா அவர்களின் பாட்டனும், மாந்தைவடக்கு நெடுங்கண்டல்பகுதியில் பலவருட காலம் பொலிஸ் விதானையாயிருந்து இளைப்பாறியவருமான திரு. நீக்கிலாஸ் சந்தான் அவர்கள் விருத்தாப்பியநோய் கண்டு அடம்பன் புதியகட்டளைக்குரவர் வண. எஸ். வேந்தர்கோன் சுவாமிபவர்களால் அந்தியதேவதிரவிய அனுமானங்கள் அருளப்பெற்றுச் சென்ற 15-5-51 செவ்வாயன்றிரவு இனசனர் புடைசூழ்ந்துநிற்க அமைதியாகமரணமாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 85. இவர் தேவபக்தி, குருபக்திஉள்ளவராய், செபமாலைஓதுவதில் என்றைக்கும் கடைப்பிடி உடையவராய் விளங்கிவந்தார். மன்னாரில்நடந்தேறிய சற்பிரசாதசமாகமத்தின் மகிமையங்கத்தவருள் ஒருவராக அடம்பன்விசாரணைப்பங்குக்கு இவரேதெரியப்பெற்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. எடுத்தகருமத்தை இனிதே நடாத்திமுடிக்கும் ஆற்றலும், களங்கமற்றமனப்போக்கும், அயராஊக்கமும் இவரில்காணப்பட் நற்குணங்களாகும். இவரின்பிரேதமானது மறுநாள் பெருந்தொகையான இனசனர் சிநேகிதர்சமுகமாகச் சேமக்காலை கொண்டுசென்று வேதாசாரமுறைகளுடன் பூமதானஞ் செய்யப்பட்டது. இவரை இழந்து துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளுக்கு எனது அனுதாபமுஞ் சேர்வதாக.

R. I. P.

— நா. நூதன்

## சிலாபத்துறை
## அர்ச். பிரான்சிஸ் சவேரியார் திருநாள்

வழமைப்பிரகாரம் இவ்வருடமும் ஆனிமாதம் 19-ந் திகதி சிலாபத்துறையில் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் அர்ச். சவேரியாரின் திருநாள் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படும். சிந்துதேச அப்போஸ்தலரின் தாசர்கள் அனைவோரும் வந்து அவருடைய் சலுகையை இரந்து மன்றாடித் திருநாளைப் பத்தியருட்சிக்குரியவிதமாய்க் கொண்டாடிச் சிறப்பித்தேகுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ஆனிமாதம் | 9-ந் | திகதி | கொடியேற்றம் |
| ,, | 18-ந் | ,, | மாலைஆராதனையும் (வேஸ்பரும்) |
| ,, | 19-ந் | ,, | திருநாட் பாடற்பூசையும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும். |

கவனிப்பு:—

சுற்றுப்பிரகாரமுடிவில் யாத்திரிகட்குக் கோவில் விருந்து அளிக்கப்படும். அதில் பங்குபெற விரும்பும் அனைவோரும் கட்டளைச்சுவாமியாரிடம் நேர்த்திக்குரிய உணவுப் பொருட்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கட்டளைச்சுவாமியார்

—அமெரிக்க பென்ஸில்வேனியா நாட்டைச்சேர்ந்த ஸ்கிறுண்டன் எனுமிடத்தில் சென்ற அறுபது ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட கடிதப் போக்குவரத்துமூலம் கற்பிக்கப்படும் சர்வதேச கல்விமன்றம்எனும் ஸ்தாபனம் அகிலஉலகிலும் பெரும்புகழ் ஈட்டியுள்ளது. இந்தக் கல்விமன்றம் தனிப்பட்டவர்களாலேயே நடத்தப்படும் ஓர் ஸ்தாபனமாகும். தபாலலுன்றின்மூலமாகவே இது உலகெங்கணும் இயங்குகிறது. இதில் உத்தியோகப் பொறுப்புள்ள அங்கத்தினராய் அமெரிக்காவிலும் பிறநாடுகளிலும் 800 பேர் வரையிலுண்டு. இதுவரை ஐம்பது லட்சம் அமெரிக்கருக்கும், பத்துலட்சம் அந்நியநாட்டினருக்கும் இக்கல்விமன்றம் தபால்மூலமாகக் கல்விபயிற்றியிருக்கின்றது.

—அமெரிக்காவில் செண் லூயிஸ்நகரியின் யேசுசபைச் சர்வகலாசாலையிலுள்ள ஸ்ரீலோறீ டாளி என்பவருக்கு வத்திக்கான் புத்தகசாலையிலுள்ள நூல்கள் முழுவதையும் சினிமாப்படமாகப் பிடிக்க உத்தரவளிக்கப்பட்டிருக்கிறது. இதைச்செய்துமுடிக்க பதினைறுமாதங்கள் செல்லும். 50,000 பவுண் செலவாகும். 41,000 கைப்பிரதிகள் சினிமாப்படமாகப் பிடிக்கப்படும்.

## மரணித்தவள் மகள்

பவளத்தீவில் பட்டப்பெயர்களுக்கு அளவேயில்லை. இப்பட்டங்களைச் சூட்டுவதில் இத்தீவுவாசிகள் முதன்மையான இடம் வகித்திருக்கின்றனர். மொண்டி, கறுவல், வெள்ளையன், சீனிவாயன், மூத்தாள்சிரட்டை, மசுக்குட்டிக்கிழவி, மங்காத்தை, வெள்ளைச்சி, குமாரத்தி, கண்மூடி, திருக்கைச்சி, மாணித்தவள்மகள் எனப் பல பட்டப்பெயர்கள் அக்காலத்தில் விளங்கிக்கொண்டிருந்தன. இவைகளில் "மாணித்தவள் மகள்" என்ற பெயர் என்கவனத்தைக் கவரக்கூடியதாயிருந்தது. அப்பெயர்கொண்டவள் வீரசிங்கமுதலியார் வமிசத்திற் தோன்றியவள்.

நான் சிறுபாரயத்தில் அந்தப்பெயரைப் பலமுறையும்கேட்டேன். ஆனல், அக்காலத்தில் அதில் ஏதோ நூதனம் உண்டென்று எனக்குப் புரியவில்லை. பத்துவயதில் பெற்றோருடன் கொழும்புநகரில் வசிக்கத்தொடங்கியான் உபகாரசம்பளம் அடைந்தபின்தான் தீவுக்குத் திரும்பினேன். அப்பொழுதே 'மாணித்தவள் மகள்' என்னும் பெயரில் அடங்கியுள்ளமர்மத்தை அறியவிரும்பினேன்.

எங்கள்தீவின்வயோதிபர்கள் கடந்துபோன காலத்தை நன்ருய் அறிந்தவர்கள். அயல்வீட்டில் சுருங்கின முகத்தையுடைய "குஞ்சி" என்ற குடுகுடு கிழவிஒருத்தி இருந்தாள். அவளிடம் இதைப்பற்றி விசாரித்தபோது, எனக்கு இச்சம்பவம் தெரியாததைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

"இதென்ன, உங்களுக்குத் தெரியாதா?" என்ருள்கிழவி.

"இல்லைப்பாட்டி, சிறுப்பக்தொட்டுக் கொழும்பிலே வசித்துக்கொண்டிருந்தேனே" என்றேன்.

"மெய்யாகவா! அப்படியானல் உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்ருள்.

குஞ்சிக்கிழவி காட்டின நாற்காலியில் உட்கார்ந்தேன். பலமுறையும் தொண்டையைச் செருமிக்கொண்டு பின்வரும் வரலாற்றைக் கூறினள்:

"அக்காலத்தில் ஒல்லாந்து தேசத்தார் கட்டின கோட்டைஅருகிலுள்ள வீட்டில் வீரசிங்க முதலியார்மகளும் கணவனும் நகமும் சதையும் போல் அந்நியோன்னியமாய் வசித்துவந்தார்கள். அவர்களுடைய கலியாண வாழ்வுக்குப் பரஸ்பரஅன்பு அஸ்திவாரமாயிருந்தது. கணவனுடையஅன்பு ஆசாபாசத்தினல்மாத்திரம் உண்டாகிற அன்பாயிருந்தால் அது நிலைத்திருக்க மாட்டாது. அந்தஅன்பு வெறும் மனக்கிளர்ச்சியால் அல்லது உருக்கத்தால்மாத்திரம் அன்பாய் இருக்கவுமில்லை. அவருடைய அன்பு விசேஷமாய் மனைவியைமதித்துச் சங்கை பண்ணுவதிலேயே, அவளுக்கு வேண்டிய சகல ஒத்தாசைகளையும் செய்வதிலேயே வேரூன்றியிருந்தது. தேவபக்தியும் அந்நியோன்னியவிசுவாசமும் அவர்களுடைய இல்லறவாழ்க்கையை ஒளிரச்செய்துகொண்டிருந்தன. சுகத்திலும் கணவனுடையஅன்பு மங்காஒளியுடன் விளங்கிக்கொண்டிருந்ததுபோல் துன்பத்திலும் விளங்கிக்கொண்டுவந்தது.

மெய்யான கிறீஸ்தவ சிநேகத்தின் சூரியன் அவர்கள் இல்லத்தில் தனது கதிர்களை வீசிக்கொண்டிருக்கையில், முதலியார்மகள் அன்னம்மாள் திடீரென நூதனமான ஓர்நரம்புவியாதியால்பீடிக்கப்பட்டாள். நோயின்கடுந்தாக்குதலால் சிலவேளைகளில் மூச்சடைப்பும், நாம்பு உணர்ச்சியின்மையும் நேரிடும்... இங்கே குஞ்சிக் கிழவி தன் வரலாற்றை [illegible] சிமிட்டுடன் என்னைநோக்கி: "ஐயா, இவ்வுலகவாழ்வு கனவிற்கண்ட தனம்போலும், வானத்திற் தோன்றிய மின்னல்போலும் மறைந்துபோகக் கூடும் அன்றோ!" என்று பெருமூச்சுவிட்டுத் தன்வரலாற்றைப் பின்னும் தொடர்ந்தாள்.

"சிங்காரயர் என்பது அன்னம்மாளது கணவர் பெயராகும். மனைவியுடைய நோயைக்குணப்படுத்த எந்தெந்தச் சிகிச்சைகள்செய்யக்கூடுமோ அத்தனையையும் அவர் குறைவின்றிச் செய்துகொண்டார்... ஆயினும், எவ்வளவோமருந்துகளைப் பரிகாரிமார் உபயோகித்துப்பார்த்தும் அவளுக்குக் குணம் வந்தபாடில்லை.

நோயின் அதிசயக்குணத்தைக் கேள்விப்பட்ட சன்னதக்காரர் மனக்கிளர்ச்சியாகிவிட்டனர். நல்ல வேட்டை கிடைக்கும்என்பது அவர்களுடைய எண்ணம். ஏதோ, இருக்க வேண்டும். அப்படிச் செய்வோம்; இப்படிச்செய்வோம் என்று சொல்லி ஏமாற்றிப் பணம்தட்ட எத்தனித்தார்கள் ஒன்றுமேபலிக்கவில்லை. உயிருள்ள விசுவாசம்நிறைந்த சிங்காரயருக்குப் பேய் மந்திர சாத்திரத்தின்மேல் சற்றேனும் நம்பிக்கையில்லை. அவருடையமனம் துன்பத்தால் வாடினும் தேவசித்தத்துக்கு இசைந்தமனதுடன் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டே வந்தார்.

அவர் இல்லறவாழ்க்கையில், அன்புதான் பிரதான இடம்பெற்றது. முன்னமே மூன்றுவருடகாலமாக அன்புடன் இல்லறவாழ்வை நடத்திய அவர், நோயுள்ள மனைவியுடன் அன்புடனும் தியாகத்தோடும் காலம்தள்ளினர். அவருடைய பிரமாணிக்கமுள்ள நடத்தையைக்கண்டு எல்லோரும் அவரைப் புகழ்ந்தார்கள்.

அக்காலத்தில் அம்மாவுடன் நானும் அன்னம்மாளை இடைக்கிடை சந்திக்கிறது வழக்கம். எனக்கு அப்போது வயது 20 ஆகிவிட்டது. பெரியகதிரையில் சாய்ந்திருந்த அன்னம்மாளைக் கண்டது எனக்கு இப்போதும் ஞாபகத்திலுண்டு. அவளுடைய முகம் நோயின் கொடூரத்தால் சற்றுவாடியிருந்தபோதிலும் அதில் எங்களைக் கவரக்கூடிய அழகும் அமைதியும் பரவியிருந்தன. அவளுடைய கரிய கூந்தற்சுருள்கள் கட்டுக்கடங்காமற் தாறுமாறாக வெளிவந்துதொங்கும். சம்பாஷணை அவளுடையமனதுக்கு இளைப்பாற்றி தரக்கூடியது. நயமொழிகளையும் ஆறுதலான வார்த்தைகளையும் சொல்லி அவளுடைய மனப்புண்ணை ஆற்றச் சிங்காரயர்வந்தார். நோயாளியைத் தன்னுடைய உயிருக்கு உயிராகப் பாவித்துச் சலிப்பின்றி அன்புசெலுத்துவார். இவள்பேரில் இரக்கப்படுவார். தன்பேரில் கணவன் இரக்கப்படுகிறது அவளுக்கு விருப்பம்.

"நீ சுகத்தையடைய விரும்புகிறதில்லைப்போல் தோற்றுகிறது" என அன்புடன் முறையிடுவார் சிங்காரயர். அவளோ துயர்நிறைந்த பார்வையுடன் ... ஐயோ பலவீனமும் வியாதியும் என்னை விட்டகலாது. இனிச் சுகத்தை அடையமுடியாது எனப் பதிலுரைப்பாள். "கண்ணே எதற்காக மனதைக் கலக்குகிருய்... ஏன் துயருற்று உயிரை இழக்கப்பார்க்கிருய்? உம்மிலும் கடும்நோயால் பீடிக்கப்பட்டஅநேகர் ஆரோக்கியத்தை அடைந்தார்களே" எனச் சொல்லுவார்.

அவள் கிலேசத்தொனியுடன் "நாதா! கவலைதான் என்னை வாட்டுகிறது. நீர் என்னிடம் கொண்டிருக்கிறஅன்புக்கும், பத்திக்கும் உமக்குப் பிரதி உபகாரம் காட்ட முடியவில்லை" என்று நினைத்துத்தான் என்னை நொந்துகொண்டிருக்கிறேன் என்பாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வெண்பொன் யூபிலிவிழா

## 27—5—51

**'என் ஆத்துமமே! ஆண்டவரை வாழ்த்தித் துதிப்பாயாக! அவர் செய்த சகலஉபகாரங்களையும் மறந்துவிடாதே! ஆம். ஆகவே; ஆண்டவருடைய கிருபாகடாட்சங்களை நான் என்றென்றும் பாடுவேன்." (சங்.)**

"யூபிலி" என்னும் மங்கலவிழாவைப் பற்றி நம்முள் அறியாதார் மிகச்சிலரே எனலாம். இது வரிவேதகாலத்தில் தொடங்கி அருள்வேதகாலத்திலும் தொடர்ந்துநிகழ்கின்றது. நாம் அறிந்திருப்பதுபோல் ஒவ்வோர் 25 வருடநிறைவும் யூபிலிவருடமாகும். இது வெள்ளியூபிலி, தங்கயூபிலி, வைரயூபிலியென மூவகைப்படும். இல்லறத்தாரும், துறவறத்தாருமாகிய இருபாலாருமே இதனைக் கொண்டாடி இன்புறுகிறார்கள்.

யூபிலியென்றால் என்ன? சுருங்கச் சொல்லுமிடத்து, அஃது ஓர் "பலிபீடம்." அதாவது, நன்றியறிதலின் பெருநாள். சர்வேசுரனுக்குப் பகிரங்கமாக நன்றித்துதிசெலுத்தும் மகாதினம். ஆகவே, சர்வேசுரன் கடந்த காலங்களில் கிருபாகடாட்சமாகப் பொழிந்தருளிய சகலஆசீர்வாதங்களுக்காகவும், இச்சுபவிழாவைக் காணத் தயவாக அருள்பாலித்ததற்காகவும், மேன்மேலும் அவர்திருவருளைப்பெற்றுச் சேமமே உயிர்வாழ்வதற்காகவும், ஈற்றில் அவருடன் ஒன்றித்துப் பேரின்பவாழ்வைச் சுகிப்பதற்காகவும் தேவாராதனை மூலம் அவருக்கு எமதுதாழ்மையான நன்றியைச்சமர்ப்பித்து, அவரது அனுக்கிரகத்தை இரந்துகொள்வதிலேயே இந்த யூபிலியின்நோக்கம் அடங்கும்என்க. ஆகவே, இதனைக்கொண்டாடுபவர் தேவமகத்துவம், தேவஸ்துதி என்பனவற்றையே தங்கள் உன்னதஇலக்காகக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், ஒருவர் தற்புகழ்ச்சிக்காக அன்றேல் தற்பெருமைக்காக இதனைக்கொண்டாடத் தலைப்படுவாராயின் அஃதெல்லாம் விழலாவதும் தவிர, "அவன் (ஏரோதன்) சர்வேசுரனை மகிமைப்படுத்தாததினிமித்தம் ......" என்று வேதாகமத்தில் கூறப்பட்ட பயங்கர தண்டனையும் ஓர்சமையம் அவரது பங்காகலாம்.

நிற்க, யூபிலியைக் கண்டுகளிக்கும் அதிஷ்டத்தைப்பெறுகிறவர்கள் மெய்யாகவே பாக்கியசாலிகள் என்பதில் சந்தேகமில்லை. இது சர்வேசுரனின் விசேஷகொடையும், வரப்பிரசாதமுமாகும். பொதுவிலே துறவறத்தார் ஒன்றியாய்இருப்பதாலே இப்பாக்கியத்தை அடைந்துகொள்வதுஎளிது. ஆனால், இல்லறத்தாரோ புருஷன்–மனைவியராய், ஈர்உயிரும் ஓர்உடலுமாயிருப்பதாலே அவர்கள்இருவரும் ஒருங்கே சீவந்தராய் இருந்தால்மாத்திரம் இந்தப்பாக்கியத்தை அடைந்து கொள்வார்கள். எத்தனையோ தம்பதிகள் தங்கள் திருமணயூபிலியைக் கண்டுகளிக்க ஆசித்து, நாள் எண்ணிக் கொண்டுவரும்போது எதிர்பாராதவிதமாக இடையிலே ஒருவரைஒருவர் விட்டுப்பிரிந்து மரணத்திரையுள் மறையவே, அவர்கள் எண்ணியஎண்ணமெல்லாம் கனுப்போலானதை நாம் கண்டும்கேட்டும இருக்கிறோம். ஆகவே, பலஅபாயங்களுக்குந் தப்பிப் பிழைத்துத் தங்கள் திருமணயூபிலியைக் கொண்டாடுகிறவர்கள் மெய்யாகவே பாக்கியசாலிகள் என்பதில் சந்தேகமென்ன? "உங்கள்கண்கள் பாக்கியம்பெற்றவைகள். ஏனெனில், எத்தனையோபேர் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் ஆசித்திருந்தும், அவர்கட்கோ அவைகள் கிட்டவில்லை" என்னும் கர்த்தரின் திருவாக்கியம் இதற்குப் போதியசான்றாகும்.

யூபிலி என்பது "நன்றியறிதலின் மகாதினம்" என்றால், நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோமா? ஆம், சந்தேகமறக் கடமைப்பட்டிருக்கிறோம். "உப்பிட்டவரை உள்ளளவும்நினை." நமக்கு ஒருஉபகாரம், ஒருநன்மை செய்தவரை உயிருள்ளவரை நாம் மறக்கலாகாது. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய்ந்நன்றிகொன்ற மகற்கு" என்பது ஆன்றோர்வாக்கு. உலகவழக்கிலே இவ்வாறாயின், ஞானவழக்கிலே, தேவனுடன் சம்பந்தப்பட்டமுறையிலே இந்தநன்றிக்கடன் இன்னும் எத்துணை கனகாத்திரம் கொண்டதாகும்! நமது உடல், பொருள், ஆவிமுதற்கொண்டு நாம் வைத்தனுபவிக்கும் சகலநன்மைகளும் தேவநன்கொடைகளேயன்றி வேறென்ன? நமது சொந்தவல்லமையால் ஒன்றைச் சாதிக்கவும், சம்பாதிக்கவும் எம்மால் முடியுமா? என்னையன்றி உங்களால்ஒன்றும் செய்ய முடியாது என்பது தேவவாக்கியம் அன்றோ! ஆம், அவரின் அனுக்கிரகமின்றி நம்மால் என்னதான் செய்ய முடியும்? தேவஒத்தாசையின்றி, தேவ அருளும், ஆசீர்வாதமுமின்றி நாம் உயிர்வாழவோ, ஒன்றைப்பெற்று அனுபவிக்கவோ முடியாது. இவ்விதமாக நமக்குவேண்டிய சகலநன்மைவரங்களும் அவரிடமிருந்தே பெருக்கெடுத்துவந்து நம்மைச் செழிப்புற்று வளரச் செய்கின்றன. அதனால் இத்தகையநன்மைவரங்களுக்கு ஊற்றும் உறைவிடமுமான. தேவனின்விஷயத்திலே நாம் எத்துணைபெரும் நன்றிக்கடனுடையோராய் நடந்துகொள்ளவேண்டும்? ஆகவே, இவ்வித யூபிலிஒன்றைக் கண்டுகளிக்க அருளப்பெற்ற விசேஷஅனுக்கிரகத்தை முன்னிட்டு நமது சத்துவமுழுவதும் கொண்டமட்டும் அவருக்கு எமது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோமெனப் பகரவும்வேண்டுமா?

சர்வேசுரன் இவ்விதநன்றியை எம்மிடம் எதிர்பார்க்கிறாரா? "மனுமக்கள் மத்தியில் இருப்பதே எனதுஆனந்தம்" என்று அருளியதேவன் மனுமக்களிடமிருந்து நன்றியை எவ்வளவாக ஆசிக்கிறார்என்பதற்குச் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள அந்தப் பத்துக் குஷ்டரோகிகளின் சம்பவம் போதியசான்றாகும். தமது திருப்பாதங்களில்விழுந்து நன்றிசெலுத்தியவனை நோக்கி "உங்களில் பத்துப்பேர் சொஸ்தமானார்கள் அல்லவோ? மற்ற ஒன்பதுபேரும் எங்கே?" என்று ஆண்டவர் மிகுந்தவிசனத்துடன்கேட்டுப் பெருமூச்செறிகின்றார். மற்றோர் முறை, தாம்செய்தநன்மைகளை எல்லாம்மறந்த ஜெருசலேமின் நன்றிகேட்டின்பேரிலே கண்ணீர்விட்டழுகிறார். இவைகளையெல்லாம் மனதிற்கொண்டு எமது குடும்பவாழ்க்கையிலே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளிலும் கருணாநிதியான சர்வேசுரன் திருவுளங்கனிந்து எம்மேல் பொழிந்தருளிய சகலமான ஆசீர்வாதநன்மைவரங்களுக்காகவும் எம்முடன்சேர்ந்து பிரசித்தமாக அவருக்கு நன்றிசெலுத்துமாறு எம்சத்துவம் கொண்டமட்டும் எமது திருமணவெண்பொன் யூபிலியை இயன்றபயபக்தியுடனும், நன்றி பெருகும் இருதயத்துடனும் கீழ்க்காணும் நிரல்படி நாம் கொண்டாடத் தீர்மானித்திருப்பதால், அச்சுபதருணம் (27-5-51) சமூகந்தரும்படி எம்சுற்றத்தவரையும், சிநேகிதர் முதலாம் நல்மனம்படைத்த எல்லோரையும் விநயமாக அழைக்கின்றோம். மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்கள் தேவாராதனைக்குச் சமுகமளித்து, எம்மைஆசீர்வதிக்க மனமுவந்து சம்மதியளித்திருக்கின்றார்கள் என்பதையும் ஈண்டுதெரிவித்துக் கொள்ளுகிறோம். கிறீஸ்துவே! உமக்குப் புகழ்ச்சி உண்டாவதாக! சுபம்.

### யூபிலிவிழா நிகழ்ச்சிநிரல்

1. (a) பத்தாவத்தை அர்ச். பிலிப்பு நேரியார் கோவிலில் 27-5-51. (ஞாயிறு) காலை 7-30 மணிக்கு யூபிலித்தோத்திர பெரிய பாடற்பூசை. அதனைத் தொடர்ந்து "தெதேயும்" பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம்.
   (b) தேவாராதனை முடிந்தபின் குருமனையிலே மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்கட்கு எமது குடும்பத்தின் பேரால் நன்றிக்கடன் செலுத்துதல். மத்தியானப்போசனம்.
2. பண்டத்தெருப்புப் பாத்திமா நாயகி கோவிலில் 2-6-51 (சனி) காலை 7-30 மணிக்குத் தேவதாயாருக்குத் தோத்திரமாக ஓர் பாடற்பூசை. சாயந்தரம் 5 மணிக்குத் தேவநற்கருணை ஆசீர்வாதம்.
3. அச்சுவேலி அர்ச். சூசையப்பர் கோவிலில் 17-6-51 (ஞாயிறு) வழமையான நேரத்தில் அத்திருமுனிவர்க்குத் தோத்திரமாகஓர்பாடற்பூசை.

C. S. நாயகம்
(பத்தாவத்தை)
ஸ்றேஷன் மாஸ்றர்-ரிபோங்,
சிங்கப்பூர்.


## எமது அச்சகப் பண்ணையில்

**கைதேர்ந்த சிற்பிகளைக்கொண்டு சுத்தமான பிளாஸ்டர் ஆப் பாரிஸில் வெகு நேர்த்தியாகச் செய்யப்பட்ட சுரூபங்கள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன!**

விபரம்:

| | | | | |
|---|---|---|---|---|
| திரு இருதய சுரூபம் | ... | 42" | ரூபா | 145—0—0 |
| அந்தோனியார் குழந்தையுடன் | ... | 36" | ,, | 110—0—0 |
| செபஸ்தியார் சுரூபம் | ... | 32" | ,, | 80—0—0 |
| லூர்து மாதா சுரூபம் | ... | 30" | ,, | 60—0—0 |
| திரு இருதய சுரூபம் | ... | 24" | ,, | 32—8—0 |
| தேவமாதா குழந்தையுடன் | ... | 24" | ,, | 35—0—0 |
| செபஸ்தியார் சுரூபம் | ... | 21" | ,, | 25—0—0 |
| சூசையப்பர் சுரூபம் | ... | 18" | ,, | 18—0—0 |
| இராயப்பர் சுரூபம் | ... | 16" | ,, | 13—8—0 |
| கிறீஸ்துராஜா சுரூபம் | ... | 16" | ,, | 13—8—0 |
| சூசையப்பர் சுரூபம் | ... | 12" | ,, | 6—0—0 |
| லூர்துமாதா சுரூபம் / பிலோமினாள் சுரூபம் / தேவமாதா குழந்தையுடன் | } | 9" | ,, | 4—0—0 |

கிடைக்குமிடம்: **தே நோபிலி அச்சகப்பண்ணை**
புதூர் மதுரை


## அமெரிக்க செய்தி

(2-பக்கத் தொடர்ச்சி)

**கம்யூனிஸம்என்பது கானல்நீர்**

டமாஸ்கஸ் வைகாசி 17

கம்யூனிஸம்என்பது "கானல்நீர்; கண்கட்டுவித்தை; தவறானஉபாயம்; பெரும்அபாயம்"—இவ்வாறு சிரியா தேசபத்திரிகை "அல் ஜீல் அல் ஜடீட்" எழுதியுள்ளது.

"பளபளவென்ற மேற்பூச்சுடன் கூடிய கம்யூனிஸம், மேலெழுந்தவாரியாகச் சூழ்நிலைகளைக் கண்ணோட்டமிடும் பாமரமக்களை ஏமாற்றிவிடுகிறது.

"நான்குதினுசான கம்யூனிஸ்தர்கள் மத்தியகிழக்கு நாடுகளிலே வசிக்கிறார்கள்: (1) கோமின்பாரத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்த ஸ்தாபனத்திற்காகச் சம்பளம்வாங்கிக்கொண்டுவேலை செய்கிற ஏஜண்டுகள்; (2) கம்யூனிஸம் வெற்றிபெற்றால், பணக்காரர்களிடம் இருந்துபணத்தைஎடுத்துஏழை,எளியவர்க்குப் பங்கிட்டுக்கொடுப்பார்கள் கம்யூனிஸ்தர்கள்என்பதை நம்பிக்கொண்டு காத்திருக்கும் சுயகாரியப் 'புலிகள்'; (3) ருஷியா வெற்றிபெறும்என்பதை எதிர்பார்த்து, எதிர்காலத்தில் கம்யூனிஸத்தின்பெயரால் சூறையாடும்எண்ணத்துடன் இப்போதே முந்திக்கொள்கிறபேர்வழிகள்; (4) ஏதோஒருகாரணத்தினால் வாழ்க்கையில் ஏமாற்றம் கண்டுவிட்டு, கம்யூனிஸமே மோட்சம் என்று நம்புகிறவர்கள்.

"முதல்ரகம், வயிற்றுப்பிழைப்புக்காக வேலைசெய்கிறது. கம்யூனிஸம் என்பது மோசடி என்று உண்மை விளங்கினாலும், பிழைப்பைக்கெடுத்துக் கொண்டு இவர்கள் திருந்துவார்கள் என்று அவ்வளவாக எதிர்பார்க்கமுடியாது. இரண்டாவதுரகம் பணமுங் கொடுக்கமாட்டார்கள். நிலத்தைஎடுத்துப் பங்கிட்டும் கொடுக்கமாட்டார்கள். கம்யூனிஸ்தர்கள்என்ற பட்டவர்த்தனமான உண்மை புலப்பட்டவுடன், இவர்கள் திருந்துவர். மூன்றாவதுரகத்தை வருங்கால நிகழ்ச்சிகள் திருத்தி, அவர்களது சுரண்டல்எண்ணங்களைத் தவிடுபொடியாக்கிவிடும். நான்காவதுரகத்தார் 'அப்பாவிகள்'. இவர்களுக்குஉண்மையை எடுத்துச் சொல்லிப் புரிந்துகொள்ளும்படி செய்தால், நிச்சயமாக இவர்கள் தங்கள் பிழையைஉணர்ந்து நல்வழிப்படுவர்."

(யூஸிஸ்)

— வாஷிங்ரன்நகர் அதிமேற்றிராணியாராகிய மகாவந். ஓபோயில்ஆண்டவரவர்கள்அமெரிக்கருக்குப் பின்வருமாறுகூறியுள்ளார்: இவ்வுலகப்பொருட்களை ஏராளமாகவைத்திருந்தும்தேவையானவர்களுக்குக் கொடாதுவிடல் கிறீஸ்துவதருமத்தை மிக அலட்சியம் செய்கிறதாயிருக்கும். அரசியல்விஷயங்களில் தேசங்களுக்கிடையில் வித்தியாசமான அபிப்பிராயங்கள் ஏற்படினும் அதன்நிமித்தம் தருமக்கிருத்தியங்களைச் செய்யாதுவிடலாம்என்று கத்தோலிக்கராயிருக்கிறநாம் ஆதரித்தல்இயலாது. எங்கள்நாட்டுக்குச் சர்வேசுரனால் கொடுக்கப்பட்ட ஏராளமான உணவுப்பொருட்களைப் பஞ்சத்தால்வருந்திக் கஷ்டப்படும் இந்தியருக்கு நீங்கள் கொடுக்கவேண்டுமென்று உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கோடியற்புதரையும், அர்ச். ஆரோக்கியநாதரையும், சங். அல்போன்சா அம்மாளையும் எனக்கு ஏற்பட்ட இருதய நோயைத் தீர்த்தருளுமாறு கேட்டமன்றாட்டு அனுகூலமானது. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கின்றேன். அவர்கள் நாமங்கள் என்றும் ஸ்துதிக்கப்படுவதாக.

G. N. R.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கே செய்தீர்கள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

உமது திருவடி சேர்த்தருளுந் தாயே! என வேண்டிக்கொண்டாள். புருஷனின்பிரேதம் அப்படியே கிடக்க, பசியினால்தவிக்கும் மகனின் பசிக்கொடுமையைப்போக்கப் பட்டணத்துக்குள் நடக்கிறாள். (எதிரே ஒரு ஹோட்டல் முதலாளி உட்கார்ந்திருக்கிறார்.)

முதலாளி: (தனக்குள்) என்னடா ஒருஆளையும் காணோம் சாப்பாட்டிற்கு. இன்று ஸ்பெஷலாகத் தயாரித்த கோழிப்பிரியாணி செலவாகவில்லையே, அரைமணிநோத்துக்குள் அபாயச்சங்கு அடித்துவிடும். ஓடி ஒளியவேண்டும். அப்புறம்வியாபாரம் நடக்காது.

அந்தோனியம்மாள்: சர்வேஸ்பரனுக்குத் தோத்திரமய்யா! பிள்ளை பட்டினியால் அழுகிறது. ஒருகவளம்சோறுகொடுங்கய்யா!

முதலாளி: சீ, நாயே போ! சகுனத் தடையாட்டமா! முதல் முதல் வந்துநிற்கிறாயே. பிழைக்கத்தெரியாதுபோனால் எங்கேயாவது குளம்குட்டையில்விழுந்து சாகிறதுதானே. வேதத்திலே சேர்ந்திட்டாளாம்–வேதத்திலே. பிச்சை கேட்கும்போதுகூட வேதமாம். சர்வேஸ்பரனும். போ கழுதை.

(அந்தோனியம்மாள் போகிறாள்)

அந்தோனியம்மாளின் மகன் ஜேம்ஸ்: அம்மா பசிக்கிறதே.

தாய்: இந்தத் தெருவில் இரண்டுவீட்டில் எடுத்துப்போடுகிறேண்டா அழாதே அப்பா!

(முதல்வீட்டில்போய் பிச்சை கேட்கிறாள்.)

அந்தோனியம்மாள்: சர்வேஸ்பரனுக்குத் தோத்திரம். கொஞ்சம்சோறு போடுங்கம்மா. குழந்தைஅழுகிறது. சாப்பிட்டு மூன்றுநாளாச்சு.

உள்ளிருந்துஒருகுரல்: அந்த மூலையிலே வேதக்காரர் வீடு இருக்குது, அங்கேபோய்க் கேள்.

(அந்தோனியம்மாள் கிறீஸ்தவர்கள்வீட்டை விசாரித்துப் போகிறாள்.)

அந்தோனியம்மாள்: சர்வேஸ்பரனுக்குத்தோத்திரம். அம்மா குழந்தைக்கு ரொம்பப்பசி. கொஞ்சம் சோறு போடுங்க.

உள்ளிருந்து ஒருகுரல்: இங்கிருந்து மூன்றாவதுவீட்டுக்கு அடுத்தாற்போல் ஒருபணக்காரன் இருக்கிறார். அங்கேபோய்க் கேள்.

(அந்தோனியம்மாள் விசாரித்துப்போய்ப்பார்க்கிறாள்.) அங்கு வீடேயில்லை. ஒருபுத்தர்கோவில் மட்டும் இருந்தது. (அதையும் தாண்டிச் சென்றுவிட்டாள்.)

அந்தோனியம்மாள்: (தனக்குள்) யேசுவே! கிறீஸ்தவர்களும் இப்படிச்சொல்லி ஏமாற்றுகிறார்களே. ஆண்டவரே, நீரேதஞ்சமென்று வாய்க்குள் முணங்கிக்கொண்டு சென்றாள். குழந்தைக்குப் பசியினால் மயக்கம்வந்தது. பாவம்! சிறிதுநேரத்தில் இறந்துவிட்டது. அதேபசிக்கொடுமைக்குச்சிறிதுநேரம்கழித்து அவளும் இரையானாள்.

அவள் இறந்த சற்றுநேரத்தில் கம்யூனிஸ்த விமானப்படைகள் டேகுநகரின்மேல் குண்டு வீச, அந்தோனியம்மாள் பிச்சையெடுத்த தெருவில் இருந்த அனைவரும் அழிந்தனர்.

## மோட்சம்

யேசுவின் வலதுபுறத்தில்: அந்தோனியம்மாள், புருஷன்-மகன், இன்னுஞ்சொற்ப பரிசுத்தஆத்துமாக்கள்.

யேசுவின் இடதுபுறத்தில்: ஹோட்டல் முதலாளியும், டைதெருவில்வாழ்ந்த துர் ஆத்துமாக்களும், பிச்சை கொடாதவர்களும்.

யேசு: (இடதுபுறம் நிற்பவர்களைப்பார்த்து) துரோகிகளே! உங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நரகத்துக்குப் போங்கள். என்முகத்தில் விழிக்காதீர்கள். அங்கே அழுகையும், கூக்குரலும், பற்கடிப்புந்தான் உங்களுக்குக் கிடைக்கும் சமாதானமாகும். நீங்கள்என்னைச் சந்திக்கவுமில்லை, எனக்குஆறுதல் அளிக்கவுமில்லை. போங்கள் நரகத்துக்கு. சபிக்கப்பட்டவர்களே போங்கள்.

துர்ஆத்துமங்கள்: மோசம் போனோம். ஒருநிமிஷ வாழ்வுக்காக எங்கள் ஆத்துமத்தைக் கெடுத்துக்கொண்டோம். அழிந்தோம். (பயங்கரசப்தம்— ஒரே கூக்குரல்—நரகத்தில் தள்ளப்படுகிறார்கள்.)

யேசு: (நல்லவர்களைப்பார்த்து) ஆசீர்வதிக்கப்பட்ட மக்களே! வாருங்கள், மோட்சஇராச்சியம் உங்களுடையது. நான் தாகமாய்இருந்தேன், தண்ணீர் கொடுத்தீர்கள். நான் பசியாய் இருந்தேன் பசியாற்றினீர்கள்.

ஒருபரிசுத்தஆத்மா: ஆண்டவரே, நாங்கள்எப்போது தண்ணீர் கொடுத்தோம்? பசிஆற்றினோம்?

யேசு: பரிசுத்த ஆத்துமாக்களே! "உலகத்தில் ஏழைகளுக்குச் செய்யப்படும் ஒவ்வொருஉபகாரமும் எனக்கேசெய்தீர்கள்" வாருங்கள்—மோட்சத்திற்கு. "அங்கே சகல பாக்கியங்களும் உண்டு." மோட்சம் போகிறார்கள்.

(திரைவிழுகிறது)

— கி. இ. து.

## நடைமுறைக்குதவியான கல்வியே வேண்டும்


போதனையிலுள்ள அரசினர் சிரேஷ்ட ஆங்கிலபாடசாலையில் சென்றவாரம் நடைபெற்ற விருந்துபசாரணையின்போது தற்சமயம் வித்தியாகர்த்தாய் விளங்கும் டக்றர் ஹோவ்ஸ் அவர்கள் பேசும்போது "புஸ்தகப் படிப்பு மாணவருக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடியதென்றும் பாடசாலைகளில் நடைமுறைக்கு உதவியான கல்வியே திட்டத்தின் ஒருபாகமாய் அமைய வேண்டுமென்றும் அரசினரின் அபிப்பிராயமும் அதுவேயாகுமென்றும் குறிப்பிட்டார்.

கீர்த்தி வாய்ந்த

கிறவுண் மார்க் ஓடுகள்

முடி அடையாளம் பதித்த ஓடுகளையே

பாவியுங்கள்!



இவ் ஓடுகளை அழைப்பித்து விற்பவர்:

மிசெஸ் இம்மனுவேல் திருச்செல்வம்

அவர்கள் மாத்திரமே.

இன்னும் ஓட்டுக்கலவையிலே தயாரிக்கப்பட்ட இந்தியன் செங்கற்களும், தளவரிசைக் கற்களும் விற்பனைக்குண்டு.

[முன்போல் வியாபாரம் நடந்துவருகிறது.]

விலாசம்: பெரியதெரு, யாழ்ப்பாணம்.

தந்தி: திருச்செல்வம், போன் நம்பர்: 52.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

இச்சபையின் மாதாந்தக் கூட்டம் இந்தமாதம் 25-ந்தேதி, வழமையான நாளிலும், நேரத்திலும், இடத்திலும் நடைபெறும். ஆனிமாதம் பரிபூரண பலன் அடையக்கூடிய நாட்கள்: 1 (2), 2, 3, 13, 20 (2), 24, 29. பொதுப் பாவமன்னிப்பு 1-ம் 29-ம் தேதிகளில் இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director

### JAFFNA MUNICIPAL COUNCIL

Supplementary Budget (No. 1) 1951.

Notice is hereby given in terms of section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that Supplementary Budget No. 1 of the Jaffna Municipal Council for the year 1951, which is to be laid before the next General Meeting of the Council, will be open to public inspection at the Municipal Office for Seven days commencing from Monday 28th May 1951.

C. PONNAMBALAM,
Mayor of Jaffna.

Municipal Office,
Jaffna, 23rd May 1951.

## சுதேச வர்த்தமானம்

### மோட்டர்பாதைப் படகு

ஊர்காவற்றுறைக்கும் காரைதீவுக்கும் இடையிலுள்ள மோட்டார் பாதைப் போக்குவரத்து சென்ற 3 வாரங்களாகத் தடைப்பட்டமையினால் இருமருங்குமுள்ள பிரயாணிகளுக்கு அதிகஷ்டமாயிருக்கிறது.

### காடிக்கிரையான இருசிறுவர்

கல்கமுவாவிலிருந்து 12 மைல்களுக்கப்பாலுள்ள ஒரு கிராமத்தைச்சேர்ந்த பாத்தும்மா என்னும் 7 வயதுச் சிறுமியும், ஜஹ்பர் என்னும் 8 வயதுச்சிறுவனும் பாலைப்பழம் பறிப்பதற்காகச் சென்றவிடத்தில் காடிதாக்கி இருவரும் மரணமாயினார்கள்.

### மோசடி வழக்கு

கொழும்பில், கே. எல். பியசேன என்பவர் தம்மால் ஒழுங்குசெய்யப்பட்ட களியாட்டத்தில் வேலைகொடுப்பதாகச்சொல்லி மூவரிடமிருந்து ஆளுக்கு 300 ரூபா பெற்றுக்கொண்டு நம்பிக்கை மோசடி செய்ததாக வைக்கப்பட்டவழக்கில் பிரதமநீதிபதி எதிரியை 1,000 ரூபா பிணையில்விட்டு, விசாரணையை ஆனிமாசம் 12-ந்திகதிக்குக் குறிப்பிட்டார்.

### முக்கொலை வழக்கு

கலகெதரையில் முக்கொலைக்குக் காரணராயிருந்த ராஜகருணா என்பவரை அங்கொடையிலுள்ள மனநோய் வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கின்றனர்.

### அச்சுவேலி வைத்தியசாலை

அச்சுவேலி வைத்தியசாலைக்கு ஒரு டக்றரைக் கூடியகெதியில் நியமித்துத்தரவேண்டுமென்று கௌரவ சுகாதார மந்திரியாரைக் கேட்பதற்கு அச்சுவேலிக் கிராமவிருத்திச்சங்கத்தில் ஏகமனதான தீர்மானமொன்று நிறைவேறியிருக்கிறது.

### தமிழ் ஆசிரிய கலாசாலைகளுக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிதற்கான பரீட்சை ஆனி — 1951.

(1) இன்னும் தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்கப்படாத பழைய உணவு உற்பத்தி ஆசிரியர்கள் மேற்குறித்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஆசிரியர்களைப்போலவே கருதப்படுவாரெனவும், பரீட்சைக்குரிய விதிகளிற் குறிக்கப்பட்ட வயதைப்பற்றிய எல்லை அவர்களுக்கு உரியதாகாதெனவும் இதனால் அறிவிக்கப்படுகின்றது.

(2) ஆகையால் அத்தகைய உணவு உற்பத்தி ஆசிரியர்களிடம் இருந்து இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படும். விண்ணப்பங்கள் உரிய மாதிரிப்பத்திரத்தில் உதவிப் பரீட்சாதிபதி, பரீட்சைப் பகுதி, போட் ஹவுஸ், கொழும்பு என்ற விலாசத்துக்குப் பதிவுசெய்து அனுப்பும் தபால்மூலம் அனுப்பப்படல்வேண்டும். அவ் விண்ணப்பங்கள் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 31-ந் திகதிக்குப்பிந்தாமல் இக்கந்தோரை அடைதல்வேண்டும்.

(3) பரீட்சைப் பகுதியிலுள்ள இ. எஸ். கிளையிலிருந்து உரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெறலாம்.

(4) விண்ணப்பக்காரர் கடைசியாக உணவுஉற்பத்தி ஆசிரியராகக் கடமைபார்த்த பாடசாலையின் பெயர், அவர் வேலையினின்றும் நீக்கப்பட்ட திகதி, வித்தியாதிபதி அவரை வேலையினின்றும் நீக்குவதாக அறிவித்தகடிதத்தின் பிரதி ஆகிய விபரங்கள் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் அனுப்பப்படுதல் வேண்டும்.

பதில் உதவிப் பரீட்சாதிபதி
பரீட்சைப் பகுதி,
போட் ஹவுஸ்,
கொழும்பு.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 24 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org